தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 30—10—1954 | சனிக்கிழமை | இதழ் 18

தோழர் சிவஞானமும் 'தமிழன் தாலி'யும்

தமிழ்ப் பண்பாட்டில் தாலிகட்டும் வழக்கம் உண்டா? இதுபற்றி பல பெரும்புலவர்கள் ஆராய்ந்தனர். மிகப்பெரும்பாலோரின் முடிவு, தாலிகட்டும் வழக்கம், தமிழ்வழக்கம் அல்ல என்பதே.

தமிழன், தாலிகட்டியதாகவோ. திருமணத்தின் புனிதத் தன்மைக்கு அது நீங்காத சின்னம் என்பதாகவோ தமிழ் வரலாறு எதுவும் குறிப்பிடவில்லை. இதனையே, அண்மையில், மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராயிருக்கும் தோழர், டாக்டர் ராசமாணிக்கனார் அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். அதாவது, பழங்காலத்தில் தமிழர்களிடையே தாலிகட்டும் வழக்கம் இல்லை என்றும், எட்டாம் நூற்றாண்டிற்கூட, தமிழர் திருமணமுறையில், சடங்குகள் சில இருந்தன என்றும், தாலிகட்டும் வழக்கம் இல்லையென்றும் உரைத்தார்கள். இதனை எதிர்த்து தாலியின் சார்பில் வழக்காட விரும்பிய தமிழரசுப் பெருந்

இதில் அவர், 'பெரும்புலவர்கள்' என்ற வார்த்தையில் உள்ளடக்கியவர்களில், தோழர் ராசமாணிக்கனாரும் ஒருவர் என்பது அவர்தம் உரையால் அறியக்கிடக்கின்றது. அத்தகைய பெரும்புலர், ராசமாணிக்கனார் "**உண்மைக்கு மாறான கருத்தை**" வெளியிட்டு விட்டார் என சிவஞானம் கூறுகிறார். ஏதோ, தெளிவான **உண்மை** என்று ஒன்று முடிபு கண்டு இருத்தல் போலவும், அதனின் நீங்கி, ராசமாணிக்கனார், அறியாமையால் பேசிவிட்டதாகவும் அவர்கருத்து! முதல் வரியில் சிவஞானம் கூறுகிறார், "**தெளிவாக** எழுதப்பட்ட வரலாற்று நூல் "**இல்லை** என்று. மறுவரியில், "**உண்மைக்கு** மாறானதைச் சொல்கிறார்கள்" என்று கூறுகிறார். **தெளிவான** நூல் இல்லாதபோது, முடிபுகட்டிய **உண்மை** எங்கிருந்து புலனாயிற்றோ, நாம் அறியோம்!

"இது இப்படி இருந்திருக்கலாம்" என ஒருவர் ஆராய்வதில் இருந்தது என்கிறார்! முதலில் சிலப்பதிகாரத்தை ஆதாரமாக்குகிறார்.

"சிலப்பதிகாரத்தில், கண்ணகி-கோவலன் திருமணத்திற்கு முன்பு, 'மங்கலஅணி' புகார் நகர வீதிகளை வலம்வந்ததாகக் கூறுகிறார், இளங்கோவடிகள். இந்த 'மங்கலஅணி' என்பதற்கு 'மாங்கல்ய சூத்திரம்' என்று பொருள்கூறுகிறார் அரும்பத உரை ஆசிரியர்."

—இது சிவஞானம் எழுதியிருப்பது' 'மங்கல அணி' புகார்நகரை வலம் வந்ததாக சிலப்பதிகாரத்தில் உள்ள பாடலைக் குறிப்பிடவில்லையேனும் அதன் பொருளைக்குறிப்பிடுகிறார். பாடல் இதுதான் :

முரசியம்பின ; முருடதிர்ந்தன ;
முறை எழுந்தன பணிலம் வெண்
நடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன
வகலுண் 'மங்கல அணி'
எழுந்தது !

விளக்கப்படுகிறது. ஊர் "ஜேஜே" என்றிருந்தது என்பது போல, உற்சாகத்தை விளக்குகிறார் இளங்கோ அடிகள். '**அகலுண் மங்கல அணி எழுந்தது**' என முடிக்கிறார். இதற்கு, '**மாங்கல்ய சூத்திரம் வலஞ்செய்தது** எனப்பொருள் கொள்வது தவறு. அரும்பத உரையாசிரியர்தான் இதற்கு அப்படிப் பொருள் கொண்டுள்ளார். அடியார்க்கு நல்லார் தன்உரையில் "**மங்கல அணி—மங்கல அணி**" என்று மட்டுமே கூறிவிட்டார். இதிலிருந்தே, அரும்பத உரையாசிரியரின் கருத்தில் அடியார்க்கு நல்லார்ஐயப்பாடு கொண்டார் என்பதும் அப்பெரியாருக்குப் பின் மாற்றுப்பொருளான எதிர் பொருளைக் கூற அஞ்சி விடுத்தார் என்பதும் அறியக் கிடக்கின்றன. ஊரிலே முரசு, மத்தளம், சங்கம் ஆகியவற்றின் ஒலியொடு இயற்கை அழகும் எழுந்தது எனக்கொள்வதே முறை. '**மங்கல அணி**' என்பதற்கு இயற்கை அழகு என்பதே

தமிழனுக்குத் தாலியில்லை என்பதே அறிஞர்கள் முடிபு !

தகையாளர் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள், 'தாலிகட்டும் வழக்கம் இருந்தது' என்பதற்கு ஆதாரமாக, சிலம்பு முதல், கம்பனின் புலம்பல்வரை உள்ள இலக்கியங்களில் இரண்டு மூன்றிலிருந்து ஆதாரம் காட்டியுள்ளார்கள். (இது 25-10-54 'தினத்தந்தி' யில் வந்துள்ளது.)

அந்த ஆராய்ச்சி எவ்வளவு வழுவுள்ளது—எவ்வளவு குறைபட்ட ஆராய்ச்சி என்பதைக் கூறுமுன், அவர் ராசமாணிக்கனார் பற்றிக் கூறிய முதற் கருத்தையும் ஆய்தல் வேண்டும். முதன்முதலாக அவர், "**தமிழினத்தின் வாழ்வை ஒட்டிய** பழக்க **வழக்கங்கள் பற்றி**, தெளிவாக **எழுதப் பட்ட** வரலாற்று **நூல் நம்மிடம்** இல்லை. **இதனால் பெரும்புலவர்கள்** கூட **சிலசமயம், உண்மைக்கு** மாறான **கருத்துக்களை வெளியிடுவ**தைக்**காண்கிறோம்**" என்கிறார்.

தவறில்லை. **தெளிவான** வரலாறு காணமுடியாத விஷயத்தில், இது போன்ற யூகங்களே கூறமுடியும். இதுதான் உண்மை என்று முடிபு கட்டுதற்கு மறுத்தளிக்கப்படமுடியாத ஆதாரங்கள் வேண்டும். சகஜமாக சிவஞானம் செய்கிற தவறுகளில் இப்படி சுலபமாக முடிபு கட்டிவிடுதலும் ஒன்று ஆராய்ச்சியாளன், முழுவிபரமும் கிடைக்காதவரை, யூகந்தான் கூறமுடியும். எந்த விஷயத்திற்கும் 'அதாரிட்டி' ஆக முடியாது. **தெளிவு** இல்லாத வரலாற்றில், அவர் **உண்மை** கண்டதாகக்கூறி, ராசமாணிக்கனார், அதற்குமாறான கருத்தை வெளியிடுவதாகக்கூறுவது, முதற்பெரும் பேதமை! நிற்க.

தாலிகட்டும் வழக்கம் இருந்தது என்பதற்கு எவ்வெவற்றிலிருந்து ஆதாரம் காண்கிறார், சிவஞானம்? 'சங்ககாலம் தொட்டு

—இது சிலப்பதிகாரப் பாடல். இதில் வருகிற 'மங்கல அணி' என்பதற்கு 'மாங்கல்ய சூத்திரம்' என அரும்பத உரையாசிரியர் உரை கூறியிருப்பதை, தமது கூற்றுக்கு ஆதாரமாக்குகிறார், சிவஞானம். உண்மையில் இவ்விடத்தில் 'மங்கல அணி' என்பது 'மாங்கல்ய சூத்திரம்' என்ற பொருளோடு இயங்குகிறதா?

முரசு இயம்பின—முரசு முதலியன ஒலித்தன

முருடு அதிர்ந்தன—மத்தளம் முதலியன அதிர்ந்தன

முறை எழுந்தன பணிலம்—சங்கம் முதலியன முறையே முழங்கின.

வெண்குடை அரசு எழுந்ததோர் படி எழுந்தன—வெண்குடைகள் அரசன் உலா எழுந்தபடியாக எழுந்தன.

—இதுவரை சொன்ன உரையிலிருந்து ஊருக்குள்ளிருந்த உற்சாகம்-புகாரின் உள் நிலை

பொருள்—இந்த இடத்தில்! "**அத்தனையோடும், ஊரில்இயற்கை அழகும் எங்கும் எழுந்தது**" என்பது தான் இங்கோவடிகள் கருத்து. மங்கல அணியை, வேறு பொருளின்றி, மங்கல அணி என்றே கூறிப்போந்தஅடியார்க்குநல்லார், அதற்குத் தனிப்பொருள் கூறவில்லையேதவிர,பொதுப்பொருளில்

கண்ணதாசன்

அந்தோ ! சிலப்பதிகாரமும் அவரைக் கை விடுகிறது !

‘புறங்’ கண்டோம்; ‘அகங்’ கண்டோம்; கம்பனையுங் கண்டோம்!

தம் கருத்தை வெளியிடுகிறார். அதாவது **மங்கல அணி எங்கும் எழுந்தது** என அடியார்க்குநல்லார் கூறுகிறார். “எங்கும் எழுந்தது!” ஆம்; வலஞ்செய்யவில்லை! எங்கும் ஒரே பொருள் திடீரென்று எழுவதற்கும், ஒரு பொருளே ஊரைச் சுற்றி வலம் வருவதற்கும் ஏராளமான வேறுபாடு-முரண்பாடு உண்டு. ஆகவே இயற்கை அழகு எங்கும் எழுந்தது என, சிறப்புரையாகத்தான் இளங்கோவடிகள் கூறியுள்ளார். இந்த மங்கல அணியை மங்கல நாணுக-மாங்கல்ய சூத்திரமாகக்கொள்ள முடியாது என்பதற்கு இன்னும் சிலப்பதிகாரமே சான்று காட்டுகிறது.

மாங்கல்ய சூத்திரம் வலம் வந்தது என்னும் பொருளில் இதை இளங்கோவடிகள் கூறியிருந்தால், திருமணம் நடப்பதைக் குறிக்கும் இடத்தில் அதை மறந்தா போயிருப்பார்? மாங்கல்யம் வலம் வந்தது என்று கூறியிருந்தால், ‘தாலி கட்டப்பட்டதை மறைத்தா இருப்பார்? அல்லது மறந்தா இருப்பார்? திருமணக் கூற்றில், தாலி கட்டப்பட்டால்-அதைக்கூறுது விடுவதுண்டா?

“சாலியொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறை வழிக் காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்......”

என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். பார்ப்பான் மறை வழி காட்டியது, தீவலம் செய்தது,

“நறுமலரணிந்த கோதையே! நின்னைப் புனைந்து அழகு செய்யும் மகளிர், குற்றமற்ற உனது **இயற்கை அழகு** இருக்கும்போது வேறு நகைகளையும் அணிந்ததனால் பெற்றது யாது கொல்?”

—ஆமாம்; இயற்கையழகாகிய ‘மங்கல அணி’ இருக்கும்போது வேறு அணிகள் எதற்கு என்று கேட்கிறார் இளங்கோ அடிகள். இதே உரையைத்தான் பெரும் புலவர், நாவலர் ந. மு. வெங்கடசாமி நாட்டார் அவர்களும் கூறிப் போந்தார். சிவஞானம் பாராட்டுகிற கம்பன்கூட ஒரு இடத்தில்,

“உமிழ் சுடர்க்கலன்கள் நங்கை யுருவினை
மறைப்பதோரார்”

—என்கிறான். இயற்கையான ‘மங்கல அணி’யை நகைகள் மறைக்கின்றன என்கிறான், கம்பன். ஆகவே அணிகள் யாவினும் பெரிது, மங்கல அணி—அதாவது இயற்கை அழகு என்னும் பொருளையே இளங்கோவடிகள் வலியுறுத்தியுள்ளார் என்பது யாவர்க்கும் புலனாகும்.

—மங்கல அணி, தாலிதான் என்பதற்கு சிலப்பதிகாரத்தில் துளிக்கூட இடமில்லை. முழுதும் ஆராயாத தோழர் சிவஞானத்தின் குறைபட்ட ஆராய்ச்சி ‘தாலி’தான் மங்கல அணி என்று கூறுகிறது. ‘மங்கல அணி’யை ‘இயற்கையழகு’ என்ற பொருளில் மங்கல வாழ்த்துப் பகுதியிலும், மனையறம் படுத்த காதையிலும், முறையே

போதும்! தோழர் பயப்படவேண்டியதில்லை! இந்த இடத்தில் அந்த வரி வருவது இலக்கியத்துக்குப்புறம்பும் அல்ல; ஆபாசமும் அல்ல. மேலும் இது மனிதக்கதை. அந்த வரி இதுதான்: **“மென்துகில் அல்குல்மேகலை நீங்க”**..மறைவிடத்தே மேகலை அணிதலும் ஒழிந்தாள்” என்பது பொருள்.

சிவஞானத்தின் பெருந்தவறான ஆராய்ச்சி, உண்மையாக முடியாமல், அவர் வரிகளும் அவரைக் காட்டிக் கொடுக்கின்றன! இளங்கோவடிகள், கண்ணகியின் தோற்றத்தை, உள்ளங்கால்முதல் உச்சிவரையில் கூறுவதாகவும், ஒவ்வொரு அங்கத்தின் நகைகளையும் கூறும்போது கழுத்தருகில் வந்து ‘மங்கல அணி’ என்பதாகக் குறிப்பிடுவதாகவும் ஆகவே அது தாலிதான் என்றும் சாதிக்கிறார். “ஒவ்வொரு அங்கத்தின் **அணிகளை** - அல்லது **அலங்கார**த்தைத் துறந்தாள்” என சிவஞானம் கூறுகிறார். அதன்படி இளங்கோவடிகள் முழுதும் அணிகளையே கூறவில்லை; அலங்காரத்தைச் சில அங்கங்களுக்கும் கூறுகிறார் என்கிற உண்மை அறியக் கிடக்கிறது. உதாரணமாக, “கால் சிலம்பு இல்லை—இது நகை. மேகலை விட்டாள்—இதுவும் நகை. கொங்கைக்கு தொய்யில் எழுதவில்லை—இது அலங்காரம்! நகையல்ல! எழுதுவிக்கும் ஒரு செயற்கை அலங்காரம்—அவ்வளவுதான்! அதே போல, தொடர்ந்து போகும் போதும் இளங்கோவடிகள்,

றக் கூடாது என்கிற புனிதத் தன்மைப்படி, கழற்றியிருக்க முடியாது. ஆகவே தாலி கட்டப்படவில்லை—ஒன்று! மங்கல அணியைத் தவிர வேறு அணி இல்லை—தாலி தவிர வேறு இல்லை என்ற சிவஞானக் கருத்துப்படி பார்த்தால், ஏதோ நூற்று எட்டு நகைகளைக் கழுத்தில் அணிந்தாள்; தாலியைத் தவிர மற்றவற்றைக் கழற்றி விட்டாள் என்று வலிந்து பொருள் கொள்ளவேண்டும்! இது தவறு! ஆகவே, பெரும் புலவர் வேங்கடசாமி நாட்டார் கருத்துப்படி, ‘இயற்கை அழகன்றி செயற்கை அழகு செய்யாள்’ எனப்பொருள் கொள்வதே முறை. அடிமுதல் நுனிவரை முழுதும் அணிபற்றிக் கூறியிருந்தால் சிவஞானம் கருத்துச் சரிதான்! ஆனால் அப்படி இல்லையே! பின்பும், “காதிற்குழையில்லை; முகத்தில் காதலில் வரும் சிறுவியர்வு இல்லை; கண்களில் அஞ்சனம் இல்லை; நெற்றியில் பொட்டு இல்லை” என்று அலங்காரத்தை—அணியல்லாத அலங்காரத்தை-அடுக்கி வைத்துள்ளாரே! அதுபோன்றே, “கழுத்தில்இயற்கை அழகன்றி செயற்கை அழகில்லை” என்று பொருள் கொள்ளவேண்டும். இந்த இடத்திலும் மங்கல அணி தாலி அல்ல!

அப்படி அது, தாலிதான் என்றால், கணவன் இறந்ததும் அலங்காரங்களைச் சிதைக்கிற கண்ணகி தாலியையும் கழற்றினாள் என்று இளங்கோவடிகள் கூறியிருக்க வேண்டும். அவர் அப்படிக் கூறவில்லை. ‘கட்டுரை காதை’யில்

‘கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன்; நிற்றலும் இலனெனக்
கொற்றவை வாயிற்பொற்றொடி தகர்த்து...!

—என்கிறார்.

“குறைபட்ட ஆராய்ச்சி” புலமையைக் காயுதே!

அருந்ததி பார்த்தது எல்லாம் குறிப்பிடுகிறார். தாலிகட்டியது-அல்லது அரும்பத உரையாசிரியர்கருத்துப்படியும் அதைத்தழுவிய சிவஞானம் கருத்துப்படியும் மாங்கல்ய சூத்திரம் கட்டியது இதிலே இல்லை. இதிலிருந்து ‘மங்கல அணி’ மாங்கல்ய சூத்திரம் ஆக முடியாது என்பது புலனாகும். அதுவுமன்றி, எல்லாச் சடங்குகளையும் புகுத்திய பார்ப்பனர், அந்நாளில் தாலிகட்டும் பழக்கத்தைப் புகுத்தவில்லை என்பதும் அறியக்கிடக்கும். அதற்குப் பின்னரே, அடிமைத்தனத்தை உறுதிப்படுத்துவான் வேண்டிப் புகுத்தியிருக்கலாம். ஆய்விலே காணும் முடிபு, இளங்கோ அடிகளும் அவருக்கு முந்திய சங்க இலக்கியகர்த்தர்களும் தாலிகட்டும் முறை இருந்ததாகவே குறிப்பிடவில்லை என்பதுதான்.

இந்த அரும்பத உரையாசிரியரின் உரை, பொருந்தா உரை என, தமிழ்ப்புலவர் கு. **மதுரை முதலியார்** அவர்களால் ஒருமுறை எடுத்துக்காட்டப்பெற்றிருக்கிறது. மேலும் ‘மங்கல அணி’ என்பது இயற்கை அழகு என்ற பொருளிலேயே சிலப்பதிகாரத்தின் மற்றோர் பகுதியில் கையாளப்படுகிறது. ‘மனையறம் படுத்த காதை’யில் அறுபத்தி மூன்றாவது வரியில் ‘மங்கல அணி’ பற்றிக்குறிப்பிடுகிறார், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்.

“நறுமலர்க் கோதை நின் நலம் பாராட்டுநர்
மறுவின் மங்கல அணியே யன்றியும்
பிறிதணி அணியப்பெற்றதை யெவன் கொல்”

என்கிறார். இதன் பொருள்:

‘அகலுண் மங்கல அணி எழுந்தது’ என்றும், **‘மறுவின் மங்கல அணியே’** என்றும் கூறியிருப்பதைப் பார்த்துவிட்டு, ‘அந்திமாலை சிறப்புச் செய்காதை’க்கு வருவோமானால் இங்கேயும் அதே பொருளைக் காண முடியும்!

சிவஞானம் இப்படிக் கூறுகிறார்:

“மற்றும், ‘அந்திமாலை சிறப்புச் செய்காதையில், கோவலனைப் பிரிந்த வருத்தத்தால் வாடியிருக்கும் கண்ணகியின் தோற்றத்தைக் கூறுமிடத்து,

“அஞ்செஞ்சீரடி அணிசிலம் பொழிய
கொங்கை முற்றிற் குங்குமம் எழுதாள்
மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்”

என்ற வரிகளால், சிலம்பிழந்த சீரடி, குங்குமத்தொய்யில் எழுதாக் கொங்கை என, அங்கங்களின் அணிகளை அல்லது அலங்காரத்தைத் துறந்ததைக் கூறுகிறார். மார்புக்கு மேலிடமான கழுத்து வரும்போது ‘மங்கல அணி’ என்று குறிப்பிட்டிருப்பதால் அவ்வணி தாலியே என்பது உறுதிப்படுகின்றது......”

—இது சிவஞானத்தின் சீரிய கருத்து. இதுவரை பார்ப்போம். இதில்கூட இளங்கோவடிகளின் ஒரு வரியை நண்பர் விட்டு விட்டார். அந்த வரியைச் சொன்னால் எங்கே ஆபாசம் என்று மற்றவர்கள் கூறி விடுவார்களோ என்ற பயத்தில் இளங்கோவடிகளைக் காப்பாற்ற ஆசைப்பட்டு, விட்டுவிட்டார்

“மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்!
திங்கள்வாண் முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி...”

—என்கிறார்.

இந்தவரிகள், இளங்கோவடிகள் வெறும் அணிகளைப் பற்றி மட்டும் கூறவில்லை என்பதும், ஒவ்வொரு அங்கத்தின் செயற்கை அழகையும் துறந்தாள் என்று சொல்ல வந்து, அணிபூட்டக் கூடியவற்றிற்கு அணிகளையும், அதுமுடியாத, நெற்றி, கண், முதலிய வற்றிற்கு அலங்காரத்தையும் துறந்தாள் என்று கூறுகிறார். காலில் சிலம்பு இல்லை; மேகலை இல்லை; கொங்கைக்கு அலங்காரம் இல்லை;--எனக் கூறி, கழுத்தில் ஒரு அணியும் இல்லை என்பதை—இயற்கை அழகன்றி வேறு அணிகள் சூடவில்லை என்பதை—வேறு அழகு செய்யாமல் இயற்கை அழகோடு இருந்தாள் என்பதை—மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்’ என்று கூறுகிறார். கழுத்தில் ஒரு அணியும் இல்லை என்பதே பொருள். தாலி கட்டப்பட்டிருந்தால் அதைக் கழற்

இதில், கண்ணகி, துர்க்கை கோயிலில், தன் வளையல்களை உடைத்து, தன் கணவனைக் கண்டபின் அல்லது ‘இருத்தலும் இல்லேன் நிற்றலும் இல்லேன்’ என்கிறாள். கொலைச் செய்திக்குப்பின், இச் செய்தி வருகிறது. தாலிகட்டப்பட்டிருந்தால், கண்ணகி தாலியைக்கழற்றினாள் என, இளங்கோவடிகள் குறிப்பிடாமல் இருந்திருக்க முடியாது. கண்ணகியும் தாலியைக் கழற்றாமல் முடியாது! இங்கேயும் கண்ணகி, வளையல்களை உடைக்கிறாளே தவிர, ‘தாலி’ கழற்றவில்லை. காரணம் தாலி இல்லை!

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிகழ்ந்த பின்னர், சில தோழியர், அவர்களை அமளியில் ஏற்றுவித்து, பின்வருமாறு வாழ்த்துகிறார்கள்.

“காதலற்பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக!”

—அதாவது, கண்ணகி, தன் இன்னுயிர்க் காதலனை கண்ணிலும் நெஞ்சிலும் பிரியாமல் வாழ்க கோவலனும் தன் துணையாகிய கண்ணகியைத் தழுவியகை நெகிழாமல் எக்காலத்திலும் வாழ்வதாக! என்பதாகும்.-இதிலும் ‘தாலிக் கயிறு தங்கவேணும்’ என்ற நவீன ஒப்பாரி இல்லை!

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

[redacted] முடிவே பூரணம் பெற்ற முடிபு! ★

எண்ணம்

கண்ணதாசன்

நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் உண்மையிலேயே மிகவும் அதிசயப் பிறவிகள். அவர்களது பண்பாடும் வார்த்தை வீச்சும் நடைமுறையும் அலாதியாக இருக்கும். தங்கள் கட்சிக்கென்றே சில வார்த்தைகளை நூதனமாக உற்பத்தி செய்து கொண்டு, பீடாக்கடை பிரச்சினை முதல் 'உலக சமாதான வரட்டு இழுப்பு' வரை, அந்த வார்த்தைகளைக் கொண்டே வாதிப்பார்கள். அதிலே அதிகம் அடிபட்டு நைந்து போன வார்த்தைகளில் ஒன்று 'வர்க்கப்போர்' என்பதாம். இந்தப் பதத்திற்கு மட்டும் கால்கள் இருந்திருந்தால், இந்நேரம் ஓடிப் போய் வங்காளக் குடாக்கடலில் விழுந்து உயிரை விட்டிருக்கும்! அந்த வார்த்தை பட்டபாடும் படும் துன்பமும் "தாளம்படுமோ, தறிபடுமோ, யார்படுவார்!".

கணவனுக்கும் மனைவிக்கும் நடைபெறும் சண்டையை நாமெல்லாம் 'குடும்பச் சண்டை' என வர்ணிப்போம். கம்யூனிஸ்ட் நண்பர்கள் அப்படியெல்லாம் 'சாதாரணமாக' முடிவு கட்டிவிட மாட்டார்கள். அதுவும் ஒரு வர்க்கப் போர்தான் என்று ஆணித்தரமாக வாதிப்பார்கள். "ஆண் என்கிற முதலாளி வர்க்கம், பெண் என்கிற தொழிலாளி வர்க்கத்துக்கு சரியான ஊதியம் தரவேண்டும். அப்படியானால்தான், இந்த 'வர்க்கப் போர்' நிற்கும். இல்லையேல் முதலாளித்துவ வெறியர்கள் - 'அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களின் வாரிசுகளான ஆண்கள்!-ஒழியத்தான் வேண்டும்! பெண்களிடத்தில் பொது உடமை பரவத்தான் வேண்டும்!" என்று 'அழகாக' வாதிப்பார்கள்! இதுபோன்ற வர்க்கப்போரைப்பற்றி எங்காவது ஒரு மூலையிலிருந்து ஸ்டாலின் மூளை, மார்க்ஸ் மூளை ஆகியவற்றிலிருந்து ஆதாரங்காட்டி விளாசுவார்கள்.

★

இதனை மடமை என்பர், அறிஞர்; பேதமை என்பர் பெரியோர்; பித்தம் என்பர் வைத்தியர்! இது தெளியாதா என ஆசைப்படுகின்றனர், பொதுமக்கள்!

சமுதாயத்திலே இருக்கிற குறைகளை, வர்க்கம் பிரித்துப்பார்த்து நிறைதேடுவதில் யாருக்கும் மறுப்பு இருக்க முடியாது. ஆனால், அப்படி வர்க்கம் பிரிக்கப்படும் போது, அந்தந்தப் பகுதிகளின் நிலைக்கேற்பப் பிரித்து 'வர்க்கம்' காண்பதுதான் தெளிந்த அறிவினர் செயல். எல்லா நாடுகளிலும் மொத்தமாக ஏழை-பணக்காரன் என்ற இரண்டு வர்க்கமே இருப்பதாக முடிவு கட்டுவது தன் நேரிலாத அறியாமை!' உண்மையைச் சொன்னால், கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டமான ஒரே இருவர்க்க நிலை இல்லை. (இதை முன்பே ஒரு முறை குறிப்பிட்டுள்ளேன்.) பல விதமான நிலைமைகள். பணக்காரன்-ஏழை; மேல்சாதி-கீழ்சாதி, ஆண்டவனுக்கு வேண்டியவன் - வேண்டாதவன்-இப்படிப் பலப் பல. இந்த அத்தனையையும் வெறும் முதலாளி-தொழிலாளிக் கண்ணோட்டத்தின் மூலம் தீர்த்துவிட முடியாது. இன்றல்ல; இன்னும் ஏழேழு தலைமுறைகள் போயினும் நடவாது.

★

''தமிழகத்தின் இழிநிலைக்குக் காரணம்'' என்று மொத்தமாக ஆராய்ந்து 'திராவிட முன்னேற்றக் கழகம் கண்டுபிடித்த பல காரணங்களில் ஆயிரந் தெய்வமும் பதினாயிரம் சாதிபேதமும் கொண்டு, நாட்டைத் தாழ்த்திய இந்துமதமும் ஒன்று என்பதாகும். இந்த இந்து மதத்தைச்சாடி அழிப்பதில் கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாது, தி. மு. கழகம் போராடி வருவதும் நாடறிந்ததே! அப்படிப் போராடும் போது, சில காரியங்களில், நாடு முழுவதின் ஆதரவையும்பெற்று விடமுடியாது என்பதும், கணிசமான ஆதரவு இருந்ததாலே இந்த நாடு போன்ற மடமையில் ஊறிய நாட்டுக்கு அது மிகவும் அதிகம் என்பதும் யாவர்க்கும் புரியும். காரணம், மதமுறைக்கு எதிர் மறைக் கொள்கையாக சுயமரியாதை இயக்கம் தன் கொள்கையைப் பிரகடனப்படுத்தியபோது, நாடு முற்றும் மடமையில் ஊறிக்கிடந்தது. இந்த நிலையிலேஇருந்த மக்களிடையே இவ்வளவு செல்வாக்குப் பெற்றுள்ளதே அரும் பெரும் சாதனையாகும். இன்னும் பெரும்பாலான மக்கள் மடமையையே வாழ்வாய்க்கொண்டு கிடக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனாலும், இந்து மதத்தினை ஒழித்து சமுதாயம் முழுமைக்கும் நல்வாழ்வுதர, தமது ஆதரவாளர்களைக் கொண்டே சில தீவிரமான காரியங்களைச் செய்தாகவேண்டிய நிலையில் திராவிட இயக்கம் இருக்கிறது. பெரியார் தலைமையில் உள்ள அந்தத் திராவிடக்கழகம் ஒரு தீவிர காரியத்தைத் திடீர் என்று துவக்கி விட்டது. அப்படித் துவக்கிய காரணத்தாலே, அந்தக் காரியம் தவறுடைத்து என நான் முடிவு கட்ட விரும்பவில்லை. (நான் குறிப்பிடுவது 'விக்ரக உடைப்பு'க் காரியத்தை!) காலம் தவறே தவிர, காரியம் தவறல்ல. இன்று விட்டால், என்றேனும் ஒருநாள் யாராவது அதைச் செய்துதான் ஆக வேண்டும். அப்படிச் செய்வதைப் பெரும்பாலான மக்களின் ஆதரவோடு செய்யும் அளவுக்கு பலம் பெருக்கி நிற்றல் வேண்டும். பொதுவாகவே முன்னேற்றக் கழகம் பிரசாரத்தைத் தீவிரமாக்குகிறது; பெரியார், தன் ஒரே வழிப்படி, 'வருவது வரட்டும்' என, உடைப்புக் காரியத்தைத் தொடர்ந்துவிட்டார்! இந்தக் காரியத்திற்கு ஒரு கணிசமான ஆதரவு ஏற்படும்போது, இடது சாரிகள் அனைவரும் அதில் ஈடுபடவேண்டும் என்றுதான், இடதுசாரி கழக உறுப்பினன் என்ற முறையில் நான் வற்புறுத்துவேன். காட்டை அழித்து நாடும், சுள்ளியை வீழ்த்திச் சோலையும், ஆக்கும் காரியங்களில் ஆயிரந்தெய்வ முறையை அழித்து ஒழுங்கான முறை காண்பதும் ஒன்று. இது, உண்மைப் பொது உடமைத் தலைவர்கள் கொண்டுள்ள எண்ணத்திற்குப் புறம்பும் அல்ல. ஆனால், நமது சென்னைமாநிலக் கம்யூனிஸ்டு நண்பர்களோவெனில் இதனை எதிர்ப்பதோடு, மதத்தைக் காப்பாற்றவும் புறப்பட்டிருக்கிறார்கள்! ஆடுதுறையும் பனந்தாளும் செய்யவேண்டியதை இந்த மறுமலர்ச்சி லட்சிய வீரர்கள் - தங்களை மறந்து - செய்யப் புறப்பட்டிருப்பது நகைப்புக் குரியது!

★

கீழ்க்கண்ட வரிகள், 24—10—54 தேதி, ஜனசக்தியில் தோழர் ஐ. மா. பா (!) எழுதியுள்ளவை:

"இப்படித்தான் கஜினிமுகம்மது சோமநாதர் விக்கிரகத்தை இரும்புத்தடியால் அடித்து உடைத்தான்! ஏசுவை சிலுவையில் அடித்தார்கள்! நபிமீது படையெடுத்தார்கள். ஆனால், இந்த இரும்புத் தடிகளும் சிலுவைகளும், படையெடுப்புகளும் மதத்தை அழித்துவிடவில்லை."

- ஒன்றுக் கொன்று முரண்பட்ட இந்த வரிகளை புத்திபேதலித்துப் போனவர்கள் தவிர வேறுயாரும் எழுதமுடியாது! கஜினிமுகம்மது தான்மதவெறியன்-வேறுமதத்தை விரோதித்து உடைத்தான்; ஏசு, புதுமதம் கண்டவர்; அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் ஆதிக்க வெறியர்கள். நபிமீது படையெடுத்தவர்கள், புதுக்கொள்கையின் மீது படையெடுத்தவர்கள்-பழமைப் பற்றுக்கொண்டோர்! - இந்த உதாரணங்கள், பழமையை அழிக்கும் புதுமையாளர்களுக்கு எப்படிப் பொருந்துமோ, அது அந்த மாஸ்கோ தேவதை'க்குத்தான் வெளிச்சம்! ஆனாலும் இந்த வரிகளிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. கம்யூனிஸ்ட் நண்பர்கள், இன்னும் ஒரு கோடிதெய்வங்கள் உற்பத்தியாகி, சமுதாயம் பலவீனப் பட்டாலும் கவலை இல்லை; எந்த மடமையை ஆதரித்தாவது கட்சிக்கு ஆள் சேர்த்தால்போதும் என்று எண்ணமிடுவது புரிகிறது. அதைத்தவிர இந்தப் புதிய வாதத்திற்கு வேறு காரணம் இல்லை.

"மதத்தை அழித்துவிட முடியாது!" என்று கம்யூனிஸ்ட் நண்பர்கள்வாதிப்பது, நினைக்கநினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இந்தப் புன்னகையை மைலாப்பூருக்கும் மாம்பலத்துக்கும் வீசுகிறார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. மதம் என்கிற சாக்கடைக்குப் பக்கத்தில், பொதுஉடமை என்கிற பூஞ்சோலையை எப்படித் தோற்றுவிக்கப் போகிறார்கள் என்கிற ஐயமும் ஏற்படுகிறது. பொதுவாக நல்லறிவர்களுக்குக் குழப்பம் மிக் கூறுகிறது!

சுருங்கச் சொன்னால், "இதுவரை அழியாததெல்லாம் இனியும் அழியாது" என்று விநோதமாக வாதிக்கும் கம்யூனிஸ்ட் நண்பர்கள் தங்களுக்கு சரியான சிந்தனை துணியும் இல்லை என்பதைத் தம்பட்டம் அடிக்கிறார்கள் என்றுதான் கூறத் தோன்றுகிறது!

★

இன்னுமொன்று கூறுகிறார் ஜனசக்தியார். "எதிர்ப்பதின் காரணமாக ஆதரவும் பிரசாரம் அதிகமாகி, சும்மா இருந்த கடவுளுக்கெல்லாம் உற்சவமும் ஊர்வலமும் வேதபாராயணமும் நடைபெறுகின்றன" என்கிறார். இந்தத் தேர்ந்த கண்டுபிடிப்புக்கு ஸ்டாலின் பரிசு வழங்கலாம்! மிச்சமிருந்தால் நோபல் பரிசுகூட வழங்கலாம். ஒரு புறத்திலிருப்பவன் மறுபுறத்திலிருப்பவனை எதிர்க்கும்போது, மறுபுறத்திலிருப்பவனும் பலம் சேர்த்துப் படைதிரட்டுவது இயற்கை. முடிவில் வெற்றி யாருக்கு என்பது கேள்வியே தவிர உன்னால்தானே அவனுக்கு உற்சாகம்! நீ சும்மா இருந்தால் அவனும் சும்மா இருப்பான், மடமையும் எப்பொழுதும் போல் இருக்குமே என்றுகேட்பது பித்தம். தூங்குகிற மனிதனைக் கொல்வதில் வீரம் இல்லை; அவனைத் தட்டி எழுப்பி, ஒரு கப் காபி கொடுத்து கையில் ஒரு வாளையும் கொடுத்து போர்செய்து வெல்பவனே வீரன். எதிர்சாரி ஆத்திரம் உற்சாகமாகக் கிளம்புவதை திராவிட இயக்கம் வரவேற்கிறது. அப்போதுதானே இறுதிமுடிவு-நிலையான முடிவு-தெரிய ஏதுவாகும்! எல்லாம் அப்படியே இருக்கட்டும், என்று தூங்குவதானால், கொள்கை எதற்கு;? இயக்கம் எதற்கு?

சென்ற தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரஸைத் தீவிரமாகத் தாக்கி, சட்டசபையில் சில ஸ்தானங்களைப்பெற்றார்கள். அதுவரை சும்மா மெத்தமெதக்க இருந்த காங்கிரசார், பலவிதப் பிரசாரங்களை-உற்சாகமாக - தீவிரமாகச் செய்து இந்த மாவட்டக் கழகத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளை முறியடித்தார்கள். போன தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சி சும்மா இருந்திருந்தால் இந்த வம்பே வராதே!

போரும் சாந்தியும்

போர்வீரர்கள் பிளாரென்ஸ் நகரைவிட்டுப் பாய்ந்தோடுகிறார்கள். அதைக் கண்டான் ஒரு மூடன். பக்கத்திலிருந்த ஒரு புத்திசாலியிடம், "அவர்கள் என் இப்படி ஓடுகிறார்கள்?" என்று கேட்டான்.

யுத்திசாலி: *பைஸா நகர்மீது போர் தொடங்கப் போகிறார்கள்; அது உனக்குத் தெரியாதா?*

மூடன்: *சமாதானம் வந்து இந்தப் போர் நிற்காதா?*

புத்திசாலி: *யுத்தம் இப்போதுதானே ஆரம்பித்திருக்கிறது; அதற்குள் சமாதானத்தைப்பற்றிப் பேசுகிறாயே, முட்டாள்!*

மூடன்: *என்று ஆரம்பித்தாலென்ன? ஒரு நாள் சமாதானம் வந்துதானே ஆகவேண்டும்?*

புத்திசாலி: *வாஸ்தவம். யுத்தம் நிரந்தரமல்ல; ஒரு நாள் சமாதானம் வரத்தான் வேண்டும். ஆனால், இப்போது நடப்பது யுத்தந்தான்.*

மூடன்: *ஒரு நாள் சமாதானம் வந்துதான் தீரவேண்டும் என்றால், இப்போதே-யுத்தம் ஆரம்பித்த இப்போதே-அந்தச் சமாதானத்தைச் செய்து விடக் கூடாதா?*

இது பெட்ராக் என்ற இதாலியக் கவிஞர் எழுதியுள்ள ஒரு கதையாகும்.

பெரியார்து விக்ரக உடைப்பு மட்டும் ஆச்சாரியாரையும் கிருபானந்த வாரியாரையும் உற்சாகப் படுத்தித் தூண்டவில்லையாம். கம்பராமாயண எரிப்பும் 'கம்பரசம்' வெளி வந்ததும் கூடக் காரணங்களாம்!—இது ஜனசக்தியார் கூற்று. என்னே பேத்மை! என்னே மடமை! —இதனைக் காட்டிலும், ''திராவிட இயக்கமே இல்லையென்றால் வம்பே இல்லை; கம்யூனிஸ்டு கட்சி வளர்ந்திருக்கும் என்று சொல்லியிருக்கலாம், ஜனசக்தியார்.

★

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' பாட்டைப் பாடி அண்ணாத்துரை புதிய பாகவதராகத் திகழ்கிறார் என்கிறது ஜனசக்தி. டைப் இன்று அல்ல; என்றும் அண்ணா பாடியபாட்டு அதுதான். கேளாக் காதினருக்கு அது கேட்கவில்லையேதவிர, நல்லகாதுள்ளவர்கள் எல்லோருக்கும் கேட்டிருக்கிறது.

இதெல்லாம் என்ன காரணத்துக்காக ஜனசக்தி எழுதியிருக்கிறது தெரியுமா? நண்பர் என். வி. நடராசன் அவர்களின் 'திராவிடன்' இதழில் தோழர் திராவிடப் பித்தன், ''முன்னேற்றக்கழகமே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி. கம்யூனிஸ்ட் நண்பர்களே இங்கு வாருங்கள்!'' என்று அழைத்தாராம். அதில் வந்த கோபம்தான், இந்த மறுப்புக்குக் காரணம்! பலவீனமான கணவன், தன் மனைவியைச் சந்தேகிப்பது போல, தன் தொண்டர்களைச் சந்தேகித்த ஜனசக்தி, எங்கே அந்த அழைப்புக்கு இணங்கித் தொண்டர்கள் போய் விடுவார்களோ என்ற பயத்தில் அலறுகிறது!

முடிவிலே, ஜனசக்தியாரின் திருவாசகங்கள் இவை.

'' இந்தச் சந்தடியில் மத ஒழிப்பு —ஆதரிப்புப் பேரால், மக்களிடையே சண்டையை மூட்டி விட்டு, வாழ்க்கைப் பிரச்சினைகளையும் உண்மை விரோதிகளையும் பார்க்க முடியாதவாறு திசை திருப்பி விடுகிறார்கள். இந்தச் சாக்கடையில் தான் கம்யூனிஸ்டுகளும் குதிக்கவேண்டும் என திராவிடப்பித்தன் அழைக்கிறார், ஐயோ பாவம்!

இதில், தனது இறுதியான ''அறிவுத்திறனை'' வெளியிட்டுள்ளார், எழுதியவர். ''வாழ்க்கைப் பிரச்சினை—உண்மை விரோதி'' எனும் இரண்டையும் பார்க்க முடியாதவாறு திசை திருப்பிவிடுகிறோமாம். யாருடைய வாழ்க்கைப் பிரச்சினை? கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்க்கைப் பிரச்சினையா? பதில் தேவை. யார் அந்த உண்மை விரோதி? அமெரிக்காவா! ஹி! ஹி! ஹி! ஹி! —கம்யூனிஸ்ட் நண்பர் அதைச் சொல்லவில்லை! காரணம் அவருக்கே அது இன்னும் புரிந்திருக்காது.

கடைசியில் உங்கள் சாக்கடைக்கா நாங்கள் வருவோம்! என்கிறார். வேண்டாமையா, மாஸ்கோ சாக்கடையிலேயே கிடங்கள்! என்று நாம் கூற ஆசைப்படுகிறோம். வேறென்ன செய்வது!

'ஐயோ பாவம்' என்று வதைப்படுகிறார். அதற்காக அனுதாபப்படுவோம்!

சென்னையில்

தென்றல் விற்பனையாளர்

சதர்ன் நியூஸ் கம்பெனி

23, நரசிங்கபுரம் தெரு,

மவுண்ட்ரோடு : : சென்னை-2.

★ திருப்பத்தூரில் போலீஸ் வெறியாட்டம்! ★

போலீஸ்' பொறுப்பும்-கண்ணியமும் - கடமை உணர்ச்சியும் ஒருங்கே அமையப் பெற்று - விருப்பு - வெறுப்பின்றி செயலாற்ற வேண்டிய சீரிய அமைப்பு;

'ரத்தபாசமானாலும்' சட்ட வரம்பினின்றும் - நேர்மையினின்றும் விலகி நடக்கக்கூடாத உன்னத ஸ்தாபனம்; பொது மக்களின் ஏவலுக்கும் - ஏற்ற காவலுக்கும் - பொதுமக்களின் ஊழியர்களாக பணியாற்ற வேண்டிய அரசாங்கத்தின் பொறுப்புள்ள காவற்படை;

கொலைகாரர்கள் - கொள்ளையடிப்பவர்கள்; கன்னக்கோலுடன்திரிபவர்கள்; எத்தர்கள்; மோசடிக்காரர்கள் - சதிசெய்வோர்; சமுதாய விரோதிகள் போன்றவர்களால்-பொது மக்களுக்கு தீங்கு நிகழாவண்ணம் பாதுகாக்கவேண்டிய பெரும் பொருப்பு அவர்களிடத்தில் விடப்பட்டிருக்கிறது.

அந்த பெரும் பொறுப்பை சில சமயங்களில் அந்தபொறுப்புள்ள ஸ்தாபனம் செய்ய மறக்கிறது - தவறுகிறது என்று அறியும்போது, யாரால் நீங்கு விளைகிறதோ, யார் தீமைக்கு நிலைக்களனாய் இருக்கிறார்களோ அத்தகையோருடனேயே கொஞ்சிக்குலவி கைகோர்த்துத் திரிகிறது அந்த ஸ்தாபனம் என்று கேள்விப்படும்போது, மனம் எரிமலையாகாமல் என் செய்யும்?

நமக்குமட்டுமல்ல-நல்ல இதயம் படைத்த அனைவருக்கும் கவலையைத் தருகின்ற சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது; இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில்; அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டரின் வெறிச்செயல்கண்டு மனிதாபிமானம் வெட்கப்படுகிறது; 'பிடித்து வா' அடித்து நொறுக்கு' என்று உருட்டு விழி காட்டி மிரட்டி வாழ்ந்த காட்டு ராஜா காலமல்ல இது! கடவுள் கட்டளை என்றாலும் காரணம் கேட்கும் மக்கள் ஆட்சி மாநிலமெங்கும் மலர்ந்து வரும் இருபதாம் நூற்றாண்டு; அறிவுயுகம்! காலவெள்ளம் கொடுங்கோலர் பலரை மூழ்கடித்திருக்கிறது; மதத்தை எதிர்த்தானா? கழுவிலேற்று; மடாதிபதிக்குபணியவில்லையா? உயிரோடு கொளுத்து; ஆண்டவனை சந்தேகித்தானா?விடாதே இருண்ட குகைக்குள் தள்ளி மூடு! ஆள்வோரை எதிர்த்தானா? சவுக்கடிதா - என்று குரல்கள் எழும்காட்டுமிராண்டி காலத்தை விட்டு வெகுதூரம் வந்திருக்கும் பகுத்தறிவுகாலம் இது; எத்தகைய குற்றவாளியானாலும் அவனைத் தண்டிக்க எந்த தனி மனிதனுக்கும் உரிமை கிடையாது; அந்த மனிதன் நீதிபதியானாலும் - சாதாரண போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆனாலும் சரி! சட்டம் இருக்கிறது; நீதிமன்றம் இருக்கிறது; நாகரீகமுணர்ந்தோர் அனைவரும் ஏற்பர் ஆனால் பால்ராஜ் என்ற அந்த இன்ஸ்பெக்டர் இதனை உணர்ந்தும் - மிருகத்தனமாக நடந்துகொண்டிருக்கிறார் நம் இயக்கத் தோழரும் திருப்பத்தூர் தி.மு.க செயலாளருமான நண்பர், மரி, செபத்தி என்பவரிடம், பார்ப்பனர் அல்ல அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்; கொண்ட கொள்கைக்காக-சதை பிய்ந்து சிதறியபோதும், குண்டர்களின் கொடுமைக்கு ஆளான போதும்,சிறுவைப்படுகையில் ரத்தம் சிந்தியபோதும்-அன்பு வழி நடப்பதாக - பரமண்டலத்து பிதாவிற்கு - ஞாயிறுதோறும் மாதாகோவிலில் போய் சொல்லிவிட்டு வருபவர். அவர் செய்திருக்கிறார்; ஆணவத்தைத் துணையெனக் கொண்ட காங்கிரஸ்காரர் ஒருவரின் தூண்டுதல்காரணமாக; எய்தவனிருக்க அம்பை நோவதில் பயனில்லை என்று ஆறுதல் கூறிக்கொண்டாலும்; 'அம்பல்லவே தோழர் பாலராஜ்! அறிவுள்ள மனிதஜாதியைச் சேர்ந்தவராயிற்றே! உயிரற்ற மரக்கட்டையல்லவே! என்னதான் கைக்கூலி பெற்றாலும் - மனிதன் மிருகமாக மாறக்கூடாது! ஏசுமார்க்கம்இதையா போதித்தது இவருக்கு!

நண்பர் மரி, செபத்தியை-மருத்துவமனை சிகிச்சை பெறுமளவிற்கு தாக்கி இருக்கிறார்; கைகளால் அல்ல! கால் பூட்சால்! உதைத்து-மிதித்திருக்கிறார், ராமராச்சியம் என்று பெருமையோடு கூறிக்கொள்ளுகிறார்களே-இந்த இராம இராச்சியத்தின் ஒரு சாதாரணஆள்! செய்த மிருகச்செயல் நம்மையெல்லாம் கலக்கத்தில் ஆழ்த்துகிறது.

அந்த 'பெரியமனிதர் பூட்ஸ் காலால் உதைத்ததோடுமல்ல-திருப்பதி பெருமாளாகவும் மாறி இருக்கிறார்; 'டேய் - நீ நாளை இங்கு வரும்பொழுது மொட்டையடித்துக் கொண்டு வரவேண்டும் என்றும் கட்டளை இட்டிருக்கிறார்;

9 10 54 அன்று திருப்பத்தூரில் வெற்றிப் புன்னகையுடன் தென்றலில் மிதந்து கொண்டிருந்த நமது லட்சியக் கொடியை யாரோ சில'கூலி'கள் களவாடிவிட்டனராம்; கொடி காணாமற்போனதை முறையிட போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றிருக்கிறார் நண்பர் மரி, செபத்தி; நண்பர் உள்ளே செல்லுமுன்-பால்ராஜ் அவர்கள் வெளியில் நிற்கும் ரௌடியை இழுத்துவா என்றாராம் - பக்கத்தில் நின்று கொண்டிருந்த நம் அனுதாபத் திற்குறிய (சம்பளவிஷயத்தில்) போலீஸ்காரர்கள் இழுத்து வந்து விட்டனவாம்; சென்றதும் எதையும் விசாரியாமல் தலைமயிரை பிடித்து இழுத்து வெறிகொண்ட மட்டும் அந்த தோழரை உதைத்து இரவு ஒன்பது மணிக்கு வெளியே விட்டு - மறுமுறை வரும் பொழுது மொட்டை யடித்துக் கொள்ள வேண்டும் என்று மிரட்டி இடிக்கிறாராம்; இரவு 9 மணிக்குமேல் கழகத் தோழர்கள் மரி, செபத்தியை மடித்து வமனைக்கு அழைத்துபோய் சிகிச்சை தந்திருக்கிறார்கள்; அந்த அளவிற்கு தாக்கியிருக்கிறார் அந்த 'பெரியவர்'

காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலரே இந்த அக்கிரமத்திற்கு காரணம் எனத் தெரிகிறது நண்பர் தந்த தகவல்மூலம்! அதோடு விடாமல் 'பொய்' வழக்கொன்றும்ஜோடித்திருக்கிறாரும் அந்த நேர்மையை மறந்த போலீஸ் அதிகாரி பால்ராஜ்! என்செய்வது; யாரை நோவது! அதிகாரிகளை கட்சி செல்வாக்குகளைக் காட்டி கை பொம்மைகளாக்கிக் கொள்ளும் திருவாலர்களையா? அல்லது, கூலிக்காக-கடமையை அடகு வைக்கும் பால்ராஜ் போன்றவர்களையா? கண்யம் வாழ்ந்த போலீஸ் ஸ்தாபனத்திற்கு களங்கம் கற்பித்துவிட்டார் தோழர் பால்ராஜ்! இது சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளின் பார்வைக்கு இந்த சம்பவத்தை வைக்க ஆசைப்படுகிறோம்; வேலியே பயிரை அழிக்கின்ற விபரீத சூழ்நிலை வளரக் கூடாது என்பதால்! கல்லடியும் - சொல்லடியும் - பழமைச் சமுதாயத்தில்தான் தரப்படுகிறது லட்சிய வாதிகளுக்கு என்றால்-பால்ராஜ் போன்றவர்களும் அதில் பங்கேற்பது நியாயமல்ல. எல்லோருமே [விக்டர் யூகோ வின்-'ஜாவர்'களாக] இல்லாவிட்டாலும் சராசரி மனிதப்பண்போடாவது இருக்கவேண்டும். நண்பர் பாலராஜ் போன்றவர்கள் என்று அறிவுறுத்துகிறோம்; அவரும் திராவிடர்; அவர் கைத்தடியும் திராவிடத்திலே விளையும் மூங்கில் தடி! என்பதால்! ஆயுதம் கூர் வேண்டியமுகம், ஆத்திரத்தை கக்குவதா? கூடாது!! வெறிச் செயலுக்கும் எல்லை ஒன்றுண்டு; அந்த எல்லையைக் கடந்து நடந்த எத்தனையோ 'தலைகனம்' பிடித்தவர்கள் ஊதிவிடப் பட்டிருக்கிறார்கள் உலக வரலாற்றிலே என்பதை மீண்டும் நினைவிற்கு கொண்டு வந்து அதையே எச்சரிக்கைப் பலகையாகவும் வைக்க விரும்புகிறோம்; பொறுப்பை மறந்த அந்தபோலீஸ் அதிகாரிமுன்பு

★

—வில்வம்—

தொடர்கதை

காதலோ காதல்!

எமிலி ஜோலா

தமிழாக்கம்: ரா. வேங்கடசாமி

ஆக்டேவ், அவன் பேசியதில் நம்பிக்கை யடைந்தாலும் கேட்ட விஷயத்திற்காக பரிதாபப்பட்டான். அவன் மனதில் என்னென்னவோ எண்ணங்கள். காம்பர்டனின் காதல் லீலைகள், ஆக்டேவ் - திருமதி காம்பர்டன் உறவு, ஆகிய இவைகளெல்லாம் அவனுக்கு மீண்டும் ஞாபகம் வந்தது. எப்படி இருந்தாலும் காம்பர்டனின் மனைவி பாதுகாப்பான இடத்தில் இருக்கிறாள், எவ்வித தொந்தரவும் இல்லாமல்.

இரண்டு வாலிபர்களும் பெண்களின் இரகசியங்களைப் பற்றி பேச ஈடுபட்டு விட்டதனால், தங்கள் சூழ்நிலையை மறந்து போய்விட்டார்கள். தாங்கள் பேசுவதை யாராவது ஒட்டுக் கேட்கக் கூடும் என்பதைப் பற்றி அவர்கள் சிறிதும் யோசிக்கவே இல்லை.

மாமா ஒரு மூலையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை யாரும் எழுப்ப இஷ்டப்படவில்லை. ஏன், அவரை பார்க்காமல் இருக்க முயற்சித்தவர்களும் அங்கே இருந்தார்கள். ஒருத்தி வியாபாரத்தில் இருக்கும் சலிப்பைப் பற்றி பேசிக் கொண்டிருந்தாள்.

பெர்த் எல்லோருக்கும் 'டீ' வழங்கிக் கொண்டிருந்தாள். ஆண்களிடம் மட்டும், போய் "சர்க்கரை வேண்டுமா?" என்று கேட்டு வைத்தாள். அது அவள் தாயின் பாடம்!

ஆனால் எல்லோரையும் அவளால் கவனிக்க முடியவில்லை. ஜோஸ் தனது இன்னொரு மகள் ஹார்டென்சைத் தேடினாள். கடைசியில் அவள் ஒதுக்குப் புறமாக இருந்த அறையொன்றில் நின்று கொண்டு, யாரிடமோ பேசிக்கொண்டிருந்தாள். பேசிக்கொண்டிருந்தவரின் முதுகுப்புறம் மட்டும் தெரிந்ததால், ஜோஸினால் அவரை யாரென்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

சற்று இப்படி, அப்படிச் சென்று கவனித்தபோது அவரை யாரென்று அறிந்து கொண்டாள்.

"அடேயப்பா, கடைசியில் வந்தே விட்டாரா?" என்று அவள் ஆச்சர்யமடைந்தாள்.

அவர்தான் வர்தேயர். கடந்த பதினைந்து வருடங்களாக விலைமாது ஒருத்தியுடன் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். இருந்தும் அவருக்கு ஹார்டென்சை மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்ற ஆசை!

எல்லோருக்கும் இந்தக் கதை தெரியும். அங்கிருந்த இளம் பெண்கள் வர்தேயரைக் கண்டவுடன் கண்களால் பேசிக் கொண்டார்கள். அவரைப் பற்றிப் பேசுவது நாகரீகமல்ல என்று தான் யாரும் பேசாமல் இருந்து விட்டார்கள். டர்பளாட், ஆக்டேவிடம், வர்தேயரைப் பற்றிய சகல விஷயங்களையும் சொல்லிவிட்டான். "வர்தேயரின் வைப்பாட்டிமிகவும் நல்ல பெண் சார்! வர்தேயரின் நலன்களை அவள் மிகவும் சிரத்தையோடு கவனித்துக் கொள்ளுகிறாள். ஒரு ஆணுக்கு இதைத்தவிர வேறு என்ன வேண்டும்? முதலில் ஏதோ இப்படி அப்படி இருந்தவள் தான். இப்போது மிகவும் திருந்திவிட்டாள்."

ஆக்டேவ் வர்தேயரின் முதுகுப் புறத்தை கவனித்தான், ஆவலோடு, முகம் தெரியாத காரணத்தால். வெளியில் நடக்கும் விஷயங்கள் இப்படியிருக்க, உள்ளே ஹார்டென்ஸ் வர்தேயரை மிகவும் கோபித்துக் கொண்டாள், விருந்துக்கு நேரம் கழித்து வந்த காரணத்திற்காக!

ஃ ஃ ஃ

அடி லைட் கையில் மதுக் கிண்ணத்துடன் டர்பிளாட் எதிரில் வந்து நின்றான். வந்தனத்துடன், வேண்டாமென்று கூறி விட்டபின், அவளைப் பார்த்து சிரித்தான் டர்பளாட். குறுக்கே வந்த ஒரு உடல் பெருத்த மாது மோதி அடிலைட், டர்பலாட்டின் மீது நன்றாக மோதிக்கொண்டாள். மோதின சில விநாடிகளில், சில்லறை விஷமங்கள் பல செய்து விட்டான். அடிலைட் அதையெல்லாம் பொருட் படுத்தினதாகவே தெரிய வில்லை. சிரித்துக் கொண்டே ஆடையை சரிப்படுத்திக் கொண்டு, ஒரு டம்ளரில் மதுவை ஊற்றி டர்பிளாபடிடம் நீட்டினாள்.

"வேண்டாம் போய் வா!" என்றான் அவன். இதையெல்லாம் ஆக்டேவ் கவனிக்கவில்லை. அவன் கண்கள் வெல்ரியை கவனித்துக் கொண்டிருந்தன. "இன்னுமா அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றான் டர்பிளாட்.

"ஆமாம்! இப்போது கவனியுங்கள். அவளது அழகு கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது... ஆமாம் ஒரு தடவை முயற்சி செய்து பார்த்தால் என்ன?"

"உம்... உம்! சுமாரானவள் தான்... முயற்சிப்பதில் என்ன குற்றம்? மணம் செய்துகொள்வதைத்தவிர்ப்பது நல்லது!"

"மணமா! நானா? அது நடக்காது...... நான் எளிதில் ஏமாந்தும் போய்விட மாட்டேன்! ஆகா...... என்ன அழகான பெண்?" ஆக்டெவ் தன்னை யறியாமல் பேசிக் கொண்டே போனான். டர்பளாட் வாளா இருக்கவே......

"நாங்கள் மார்சேல்ஸில் மணம் செய்து கொள்ள மாட்டோம்! நீங்கள் கவலையை விடுங்கள்!" என்று ஆக்டேவ் அவனுக்கு மீண்டும் உறுதி அளித்தான்.

ஜோஸ் அவர்கள் அருகில் வந்து கொண்டிருந்தவள் ஆக்டேவின் இந்தப் பேச்சினால், தாக்கப்பட்டு விட்டவள் போல் நின்று விட்டாள்.

"மணம் செய்து கொள்ள மாட்டோம்!" என்ற வார்த்தை ஈட்டியைப் போல் அவள் உள்ளத்தில் பாய்ந்தது. உம்! அவள் ஏற்பாடு செய்த மற்றொருவிருந்தும் பாழாய் போய் விட்டதே, எவ்வித உருப்படியான காரியமும் சாதிக்காமல். அவளால் மேற்கொண்டு நிற்க முடியாமல் போகவே, பக்கத்திருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

தன் மகளின் கல்யாண விஷயத்தில் அவளுக்கு ஏற்பட்ட தோல்விகளை விரல் விட்டு எண்ணஅவள் விரும்பவில்லை. ஆனால்... ஒன்று மட்டும் நிச்சயம். இது தான் அவள் கடைசி முயற்சி. இனி வீணாக விருந்து வைக்கப்போவதில்லை. அவள் மனதிற்குள் சங்கற்பம் செய்துகொண்டாள். ஆனால்......!

சுற்று முற்றும் பார்த்தாள், நல்ல வாலிபன் வேறு யாராவது இருக்கிறானா, வலை வீசிப் பிடிக்கலாமென்று! அகஸ்தே சுவற்றில் சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். அவனைக் கவனித்து விட்ட ஜோஸ், தன் மகள் எங்கே இருக்கிறாள் என்று பார்த்தாள். அப்போது தான் அவள் கையில் ஒரு கப் 'டீ' யுடன் ஆக்டேவை அணுகிக் கொண்டிருந்தாள். தாய் சொல் தட்டாத குழந்தை அல்லவா? அமைதியாக அவள் தன் வேலையை செய்து கொண்டிருந்தாள். ஆக்டேவிடம் நெருங்கும் சமயம் "இங்கே வா," என்று சைகை காட்டி அவளை அழைத்தாள் ஜோஸ்.

ஒன்றும் புரியாமல் தாயிடம் வந்தாள் பெர்த். "அந்த 'டீ'யை கொண்டு போய் அதோ நிற்கிறானே அகஸ்தேக் அவனிடம் கொடு. ஒரு மணி நேரமாக, காத்துக்கொண்டிருக்கிறான்." என்றாள்.

பலமாக அப்படிச் சொல்லி விட்டு அவள் காதில் ஏதோ முணு முணுத்தாள்...

"சொன்னபடி செய்! இல்லாவிடில் நான் தீவிரமாக உன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்" என முடித்தாள்.

ஒரு நிமிஷம் கலங்கிப் போய் விட்ட பெர்த், அடுத்த நிமிஷத்தில் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

ஒரு மாலைக்குள்... குறி மூன்று பக்கம் மாறுவதா? ஆக்டேவுக்காக வைத்திருந்த 'டீ'யை, எடுத்துக்கொண்டு, புன்னகையோடு அவள் அகஸ்தேயை அணுகினாள்.

பாத்திரத்தை அவன் கையில் கொடுத்து விட்டபின், சிறிது நேரம் அவனிடம் என்ன விஷயத்தைப்பற்றியெல்லாமோ பேசிக் கொண்டிருந்தாள். அகஸ்தேயின் கைகள் சற்று நடுங்கின. அவனுக்கு உடம்பே சரியாக இல்லை. தலைவலி வந்து விட்டது.

மரியாதைக்காக சிலர் அங்கு அமர்ந்திருந்தார்கள். சிலர் சாப்பிட்டவுடன் கிளம்பிவிட்டார்கள். ஆக்டேவுக்காக காத்திராமல் காம்பர்கன் டாக்டர் ஜூலிராட்டுடன் புறப்பட்டுப் போய்விட்டார். முற்றும்

[பெயர்க்குழப்பம் அதிகமாய் இருப்பதாக வாசக நண்பர்கள் கருதுவதால் "காதலோ காதல்" இந்த இதழோடு முடிவடைகிறது.]

—ஆசிரியர்

ஒரு சோல்ஜரைக் கொல்லும் செலவு

எதையும் புள்ளி விபரத்தின் மூலம் விளக்கமாய்த் தெரிந்து கொள்ள முயல்வதிலே அமெரிக்கர்களை யாராலும் மிஞ்ச முடியாது. முன் காலத்திலும் தற்காலத்திலும் ஒரு சோல்ஜரைக் கொல்ல என்ன செலவு ஆகிறது என்று அவர்கள் பின்வருமாறு கணக்கிட்டிருக்கிறார்கள்:

	ப.	ஷி.	பெ.
ஜூலியஸ் ஸீஸர் காலத்தில்	0	3	0
மார்ல்பரோ காலத்தில்	0	10	0
வெல்லிங்டன் காலத்தில்	1	0	0
இரண்டாம் மகா யுத்தத்தில்	2,000	0	0
இனி யுத்தம் வந்தால்	4,700	0	0

இலக்கியத்தில் காதல்

—: காளா முத்துப்புலவ :—

காமத்துப்பால் 2.

மெல்லமெல்லப் பார்த்துச் சிரிக்கிருள். பார்வையும் சிரிப்பும் கலந்து இருதலை நாகமாகத்தாக்குகின்றன. இளம்பருவத்தின் உனர்ச்சிகளைக் கொழுந்துவிட்டு எரியச்செய்வதற்கு இவையன்றி வேறென்ன வேண்டும்? வள்ளுவன் மேற்படிப் பெருங்கருத்தின் முழுச்சாரத்தையும் திரட்டி இரண்டு வரியில் முழுக்க முழுக்க அடைத்துக்கொடுக்கிருன். மற்றக் கவிகளினின்றும் அவனுக்கு உள்ள தனிப்பெருமைகளில் இதுவும் ஒன்று. 'கம்பசாரம்' கவிதைச் சுவைமிக்கது என்பதற்காகவாவது 'கம்பராமாயணம்' இருக்க வேண்டும் என்கிருர்களே, அவர்கள் கம்பனையும் வள்ளுவனையுமாவது ஒப்பிட்டுப்பார்த்தால் கம்பனின் நயமும் பாவமும் வள்ளுவனிடம் அமைந்து அதற்குமேலும் சிறந்து வரக் காண்பார்கள்.

★ ★ ★

போன இதழில் கண்படுத்திய பாடும் அதை ஒட்டிவந்த புன்னகை வைத்த தீயும் கூறினேன். இப்போது முழுக்க முழுக்க புன்னகையே கதையாவதைக் காண்போம்.

இவன் அவளைப் பார்க்கிருன். அவள்வெட்கத்தால்தலைகுனிகிருள் (தலைகுனிவதற்கு முன்னல்தான் ஒரு சேனையைக் கண்க்ளின் ஒட்டி வந்து தாக்கிவிடுகிருள் என முன்பு சொன்னேம்.) இவன் வேறு பக்கம் பார்க்கிருன்; அவள் இவனை அப்படியே தின்று சீரணித்து விடுபவள் போலப் பார்த்து மெல்லச் சிரிக்கிருள். அந்தச் சிரிப்பு, அன்புக்கு அடையாளம்; சம்மதத்திற்கு அடையாளம்; காதலுக்கு அடையாளம்.

இவன் வெகுநேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தால், அவளுக்கு இவனைப் பார்க்கச் 'சான்ஸ்' வேண்டாமா? அதற்கு இவன் விட்டுக்கொடுத்து வேறுபக்கம் பார்க்கிருன். இருவருக்கும் 'சிங்கிள்' பார்வையில் ஒவ்வொரு சிரிப்பு வந்துவிட்டுப் போகிறது. அதுவும் சிலர் ரேடியோவில் வகிருற கட முட சத்தம் மாதிரி சிரிக்கிருர்களே, அத்தகைய சிரிப்பல்ல; 'நகுதல்'-அதாவது குறுமுறுவல்-அதாவது புன்னகை! நைஸான சிரிப்பு! பெருஞ் சிரிப்பைக் காட்டிலும் 'நகுதல்' அழகுமிக்கது: அதை முறுவல் என்றது ஏன் தெரியுமா? உதட்டை லேசாக முறுக்கிவிடுதலாகும்!

"காதலனைப் பார்த்த காதலி சிரித்தாள்!" என்பது மகாமட்டம்! "நகுதலித்தாள்; முறுவலித்தாள்!" என்பதே காதற் சிறப்பும் பெண்களுக்குப் பெருமையும் ஆண்களுக்குக் கொதிப்புண்டாக்கும் நிலையுமாகும்!

வள்ளுவன் அதைத்தான் 'ஷாட்' 'ஷாட்'டாகக் காட்டுகிருன். குளோசப் - முகத்துக்கு மட்டும்!

"யான் நோக்குங்காலை நிலன்
நோக்கும்; நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்!"

—இது மட்டுமா? இன்னெரு புன்னகை! அது இதனிலும் மென்மையானது! அது எப்போது? இவன் ... போது "அவன்

டும்" என்று அவள் தலைகுனிந்து நிற்கிருளே, அப்போது செய்யும் புன்னகை! முகத்தைப்பார்க்கிறவன் அந்தப் புன்னகையையும் சேர்த்துப் பார்க்கட்டுமே என்ற ஆசையிற் பிறக்கும் சிறிய-மிகச்சிறிய புன்னகை! அது அவளது அழகை 'டெவலப்' செய்கிறது!

"அசையியற்கு உண்டாண்டோர்
ஏ எர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்!"

—இந்தப் புன்னகை, உதட்டை லேசாக உறித்துவைத்து, அதில் சூரிய கிரணங்களைப்பரப்பி, தேன் சுவையைக் கலந்துவைத்து, காந்த சக்தியை இணைத்து-பாரதி சொன்னதுபோல,

"………கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத்தெனு
மிவற்றின் சாரமெல்லாம்
ஏற்றி, அதனேடே இன்னமு
தைத்தான் கலந்து
காதல் வெயிலினிலே காய
வைத்தகட்டி………"

ஆமாம்! காதல் வெயிலினிலே காயவைத்த கட்டிதான் அந்த உதடும் புன்னகையும்! வெறும் உதட்டுக்குப் புன்னகை ஏறும்போது அத்தனை சாரமும் அதிலே கலந்துவிடுகிறது!

வள்ளுவன், "யான் நோக்கும்" என்ற குறளில் சொன்னதையே குயிற்பாட்டில் பாரதியும் கூறுகிருன்:—

"பெண்ணெருத்தி அங்கு
நின்ருள்;
பேருவகை கொண்டுதான்
கண்ணெடுக்கா தென்னைக்
கணப்பொழுது நோக்கினள்;
சற்றே தலை குனிந்தாள். சாமீ!
இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்!
கண்ணிரண்டும்
ஆளைவிழுங்கும் அதிசயத்தைக்
கூறுவனே?
மீள விழியில் மிதந்த கவிதை
யெலாம்
சொல்லில் அகப்படுமோ! தூய
சுடர் முத்தையொப்பாம்
பல்லிற் கனியிதழிற் பாய்ந்த
நிலவினையான்
என்றும் மறத்தல் இயலுமோ!"

என்கிருன்.

வள்ளுவன் 'நிலம் நோக்கும்' என்கிருன்; பாரதி "சற்றே தலை குனிந்தாள்!" என்கிருன். அவன் புன்சிரிப்புக்கு மென்மை கொடுக்கிருன்; இவன் தலை குனிவதற்கே மென்மை கொடுக்கிருன். **சற்றே தலை குனிந்தாள்!** ஆமாம், "சற்றே!" தான்!—தலையாட்டிப் பொம்மை மாதிரி 'படக்' கென்று குனியவில்லை. 'படக்' கென்று தலை குனிவது, நாணத்தை வரவழைத்துக் கொள்ளும் பெண்களின் செயல். இயற்கையான

குனிய வைக்கும். நாணமே இல்லாத பெண், நாணம் இருப்பதாகக் காட்டிக்கொள்ள 'ஆர்ட்டி பிஷிய'லாகத் தலை குனிவது போன்றதல்ல இது. இயற்கையான நாணம் புறந்தலையில் ஏறி, நெல் முதிர, முதிர கதிர் தலை சாய்கிறமாதிரி "சற்றே" தலையைக் குனியவைத்தது!

இந்த "சற்றே" இருக்கிறதே இது காதலின் மென்மை உருவகத்துக்கு இயற்கைத்தன்மை படைக்கும் வார்த்தை.

அம்பிகாபதி, தன் காதலியைப் பற்றி வர்ணிக்கும்போது, **"சற்றே சரிந்த குழலே அசைய"** என்கிருன். அதாவது, "கொஞ்சம் சரிந்த கூந்தல்." உருவகப் படுத்திப் பாருங்கள்; புறந்தலையில் இருக்கிற கூந்தலையும் சேர்த்து மேலே தூக்கி, உச்சியிற் கொண்டை போட்டுக் கொள்ளுகிருர்களே, பெண்கள், அது எவ்வளவு ஆபாசமாக இருக்கிறது! கூந்தல் கொஞ்சம் சரிந்து புறங்கழுத்தை மூடினுல்தான் அழகு அதிகரிக்கும். அதற்காக, பாஞ்சாலியின் கூந்தல் மாதிரி பரந்து கிடக்கவும் கூடாது; பண்டாரங்களின் கூந்தல் மாதிரி சுருண்டு கிடக்கவும் கூடாது!

"**சற்றே** சரிந்து" இருப்பதே அழகு! நிற்க.

வள்ளுவன் 'குறுமுறுவல்' பற்றியும், அது செய்த வேலைபற்றியும் அழகாகக் கூறினுன்; ஆனல், முறுவலுக்கு உவமை கூறவில்லை. காரணம், பொருள்தர வந்தவன். பொருளின் சக்தி கூறிவிட்டாலே பெரிய வேலை முடிந்து விடுகிறது. உவமைகூறிக் கொண்டிருப்பது அதற்கு மேலே செய்யப்படவேண்டிய 'நகாஸ்' வேலைதான்! அதை வள்ளுவன் செய்யவேண்டுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது—அதுவும் இரண்டு வரியில்; ஏழே வார்த்தைகளில்!

"நான் அவளைக் கட்டிப்பிடித்தேன்!" என்று ஒருவன் சொன்னல், "அப்புறம் என்ன?" என்றுதான் அடுத்தவன் கேட்பானே தவிர, "எது மாதிரிக் கட்டிப் பிடித்தாய்? பனைமரத்திலே கொடி படர்ந்த மாதிரியா? சாரையும் சர்ப்பமும் தழுவிய மாதிரியா?" என்றெல்லாம் கேட்கமாட்டான்! அங்கே விஷயம் முக்கியமே தவிர உவமையல்ல! அதற்காகவே வள்ளுவன் சிறு குறளில் உவமை கூறி விளக்கவில்லை!

ஆனலும் உவமை கூறக்கூடிய அளவுக்கு உள்ள பெருங் கவிதையில், பாரதி உவமை கூறி 'நகாஸ்' வேலை செய்கிருன்!

"………தூயசுடர் முத்தை
யொப்பாம்,
பல்லிற் கனியிதழிற் பாய்ந்த
நிலவு………"

"பழங்கள் போன்ற உதடுகளுக்குள்ளே, முத்துப் போன்ற பல்லில் நிலவு **பாய்ந்தது!**" என்கிருன். ... " ... மாதிரி;

புலி மாதிரி; இன்னும் பாயக்கூடிய சகலமும் மாதிரி, நிலவும் பாய்ந்தது! இது பாரதி சொன்னது!

அம்பிகாபதி இதையும் விட்டானு! அவன் பாரதிக்கு முன்பே இதைக் கூறியுள்ளான்!

அம்பிகாபதி, புன்னகையைப் பற்றி அழகாகச் சொல்கிருன்.

காதலி, ஓரிடத்தில் நிற்கிருள்; காதலன் வருகிருன். அன்றுவரை, காதலி, 'உடம்பாட்டுக் குறிப்பு' ஒன்றும் காட்டவில்லை. சம்மதமா இல்லையா என்பது அவனுக்குத் தெரியாத வண்ணம் நடந்து வந்திருக்கிருள். அதாவது, ஒரு சிறு புன்னகை கூடச் செய்யவில்லை. அன்று அவன் வந்து நின்றதும் 'நகு'கிருள்; **முறுவலிக்கிருள்; புன்னகைக்கிருள்!** அவனுக்குப் பெருஞ்சுமை தீர்ந்து விடுகிறது! "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டு, மனதுக்குள் 'எஞ்ஜாய்' பண்ணுகிருன்!

"மிகலே ஒழியக் குறைவேது
மின்றி,
நீடிய வெந்துயர்க்கோர்
புகலேது மின்றிப் புலம்பல்
நெஞ்சே………"

"எழுந்த துயரம், பெருகியதே அல்லாமல், குறைதல் இன்றி, அந்தத் துயரம் நீங்கி சாந்திபெற ஒரு புகலிடமும் இன்றி, புலம்பிய நெஞ்சே!………"

"………பொருந்தார் வருந்த
இகலே செயுமயில் அன்ன
கண்ணர்முகத் தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள்ளே
வந்து பாரித்ததே!"

அவளைச் சேராதவர்கள்-சம்மதம் பெருதவர்கள் வருந்தும் அளவுக்கு இகல் (போர்) செய்யும் கண்ணின் முகத்தில், இரவு நேரத்தில் மட்டுமன்றி பகலிலும் நிலவு வந்து, இரண்டு பவள வரிசைகளுக்கு ந... வில் நின்று பாரிக்கின்ற(து)தே! —இனி நீ மகிழ்வாய் நெஞ்சே!"

—அந்தப் புன்னகையில் சம்மதம் கிடைத்ததும் அவனுக்குக் குஷி ஏறிவிடுகிறது! அந்தப் பெருமையில் பழைய கொடுமையையும் நினைவு கூர்கிருன். என்னை வேதனைப் படுத்தியவள் புன்னகையால் மகிழ்வுதருகிருள் என்று சொல்லி, அந்த மிகைபட்ட மகிழ்ச்சியில் அந்தப் புன்னகைக்கு உவமையும் கூறுகிருன். "பவளத்துள் நிலவு வந்து பாரித்தது!" என்கிருன். 'பாரித்தது'—என்ருல் "பரந்தது; விரிந்தது" என்று பொருள். பவள இதழ்களுக்குள் வெண்ணிலவு வந்து **விரிந்தது** என்கிருன். நிலவு, உள்ளபடியே ஒளி வீசினுலே சிறப்பு; அது இன்னும் விரிந்தால்? ………… ... சூர்யப் பிரகாசம்! நிலவு 'என்லார்ஜ்' ஆகிறது! சம்மத புன்னகையின் ஒளி அத்தகைய **"கேண்டில் பவர்"!**

[இதற்கு வேறு ஒரு பாடமும் உண்டு என நிலைவு. "பாரித்தது" அன்றி, "பாலித்தது" என்றும் பாடபேதம். அதாவது "புன்னகை நிலவு வந்து என்னை ஆண்டு கொண்டது!" என்று பொருள்.]

—பாரதி, "பழ இதழ்களுக்குள் நிலவு பாய்ந்தது" என்கிருன்.

—அம்பிகாபதி "பவள இதழ்களுக்குள் நிலவு விரிந்தது" என்கிருன்.

—வள்ளுவன், "மெல்ல நகைத்தாள்; பைய நகைத்தாள்" என்கிருன்.

—மூன்றும் மூன்று வகை சிறப்பே!

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்

கதையமைப்பையோ-கற்பனைக் கருத்துக்களையோ - சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் இசைவு பெறல் வேண்டும்.

(முன் இதழ் தொடர்ச்சி)

காட்சி 43

[கட்டபொம்மனும் ஊமைத்துரையும் தனித்திருக்கும் அறை-பகல் நேரம். படுக்கையில் சாய்ந்திருக்கின்றனர்.]

ஊமைத்துரை: நாடகத்தின் பெயர் "காட்டிக் கொடுத்தான்" (திருப்பித்திருப்பிக் கூறிச் சிந்தனை செய்கின்றான்.)

கட்டபொம்மன்: தம்பீ! என்ன இது! நாடகத்தின் பெயர் உன் நாவிலே குடி கொண்டு விட்டது போலிருக்கின்றதே...

ஊமைத்துரை: இல்லையண்ணா! நாடகத்தின் நாமத்திற்கும் நமக்கும் ஏதோ உறவு...அது என் உள்ளத்திலே ஊசலாடுகின்றது...நாம் விரைவில் புறப்பட வேண்டும்...

கட்டபொம்மன்: தம்பி! அப்படியொன்றும் நேராது...அமைதியாக உறங்கு...ஆபத்து ஒன்றும் நேராது...

(படுத்து உறங்குகின்றனர்)

காட்சி 44

[ஊமைத்துரையின் கனவுக்காட்சி]

(பானர்மென் துரையை தொண்டமான் சந்திக்கின்றான்)

தொண்டமான்: துரையவர்களே! ஓடோடி வந்தேன்! ஓடோடி வந்தேன்!

பானர்மென்: ஏன் தொண்டமான்? என்ன அவசரம்...?

தொண்டமான்: கட்டபொம்மனை...

பானர்மென்: கட்டிப்பிடித்துக் காவலில் வைத்திருக்கின்றாயா?

தொண்டமான்: ஆமாம்! துரைகளே! ஆமாம்! கட்டபொம்மனை மட்டுமல்ல! அவன் தம்பி ஊமைத்துரையையும்...

பானர்மென்: சீமைத் துரையாம் எங்களை எதிர்த்த ஊமைத்துரையும் அகப்பட்டானா? எங்கே அவன்?

தொண்டமான்: என் அரண்மனையில்...

பானர்மென்: சிரமப்பட்டிருப்பீர்?

தொண்டமான்: களம்பூர்க்காட்டிலே அழிம்பு பல செய்து வாழ்ந்தான்...களம்புகுந்து அந்தக் கட்டபொம்மனை கைதியாக்கிக் கொண்டு வந்திருக்கின்றேன்... உடன் படையுடன் ஓடிவரவேண்டும். இன்றேல்...

பானர்மென்: காட்டுயானைகள் ஒட்டம் பிடித்து விடுமோ? திறமைசாலிதான் நீர்...

தொண்டமான்: ஆமாம்!

பானர்மென்: படை புறப்பட்டுவிட்டது...

தொண்டமான்: இதோ படுத்துறங்குகின்றனர்...

பானர்மென்: பகலில் உறக்கமா?

தொண்டமான்: ஆமாம்! எண்ணெய்முழுக்காடச் செய்தேன்...

காட்சி 45

பானர்மென்: ஏகாதிபத்திய மாளிகையின் அடிப்படையைத் தகர்த்தெறியத் தலைமை வகித்த வீரபாண்டியக் கட்ட பொம்மன் அகப்பட்டான். அகம்பாவக்காரன் ஆணவம் பிடித்தவன்...

ஊமைத்துரை: (புரண்டு படுத்து) நாடகத்தின் பெயர் "காட்டிக் கொடுத்தான்" காட்டிக் கொடுத்தான் (உரக்கக் கூவுகின்றான்) (கட்டபொம்மன் விழித்து)

கட்டபொம்மன்: (படை சூழ்ந்திருப்பதைப் பார்த்து) ஆம் தம்பி! காட்டிக் கொடுத்துவிட்டான் தொண்டமான்!

பானர்மென்: வீரபாண்டிய கட்டபொம்மதேவரே! ஊமைத்துரையோடு உம்மையும் கைதுசெய்திருக்கின்றேன்!

கட்டபொம்மன்: என்ன! எம்மையா கைதுசெய்திருக்கின்றீர்! கண்மூடித் தூங்கிக்கொண்டிருந்த எங்களையா? கைது செய்திருக்கின்றீர்! வேலும் வாளும் கொண்டு வெஞ்சமரில் வெல்ல முடியாத நீங்கள் ஈட்டியும் துப்பாக்கியும்காட்டி இருட்டறையில் தூங்கிக்கொண்டிருந்த எம்மைக் கைது செய்திருக்கின்றீர் ர். வாளும் வேலும் என் வலக்கரத்தில் இல்லாதநேரம். உங்கள் எண்ணம் ஈடேறட்டும்!

(கட்டபொம்மன் விலங்கிடப் படுகின்றான்)

ஊமைத்துரை: என் அண்ணன் கைகளுக்கு இரும்பு விலங்கு, இந்த நாட்டு மன்னனின் கைகளுக்கு இரும்புவிலங்கு. தன்னிகரில்லாத்தமிழ் மறவருக்கு அன்னியன் இடும் விலங்கு. மானமிழந்தபின் மண்ணில் வாழவேண்டாம் அண்ணா! அண்ணா! புறப்படண்ணா! போருக்கு

(வீரத்துடன் மல்யுத்தம் புரியத் தொடங்குகின்றான்

கட்ட: தம்பி!... தம்பி!...வேண்டாம் பொறு! 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை" காலம் வரும்போது காலநிலை மாறலாம்.

ஊமைத்: அண்ணா! அண்ணா! ஐயோ! அண்ணா! உனக்கா விலங்கு? உனக்கா கடுஞ்சிறை—உனக்கா காவல்!

ஏ! தமிழகமே! மானங்காத்த மான வீரனுக்கு நீ கொடுத்த பரிசு இதுதானா? மன்னியுங்கள் அண்ணா!

(இருவரும் கைதுசெய்யப்படுகின்றனர் — புறப்படும்போது)

ஊமைத்: தொண்டைமான்! அவன் எங்கேயிருந்தால் என்ன ஐயோ அண்ணா!

வீரத்தால்போரென்றால் வேட்டெழுந்து தீரத்தோடு போர் புரிந்த திருவிடமே! நீ கண்ணியம் குறைந்து களையிழந்து கயவர்களுக்கு காட்டிக்கொடுக்கத் தொடங்கியது எத்தனைநாளாய்? மானம்அழிந்தென்றால் உயிர்த்தானம் அளிப்பேன் என்ற மண்ணகமே! நீ மாற்றானிடம் மண்டியிட்டு வாழத்தொடங்கியது ஏன்?

வள்ளுவன் குறள் நெறியிலே வாழ்ந்துகாட்டிய வளமிகுந்த திரு நாடே! நீ உள்ளந்தனை இழந்து கள்ளத்தனம்கொண்ட ஊதாரியாக கப்பட்டது என்றைக்கு? ஐயோ! தமிழ் நாடே! அன்னைத் தமிழகமே ...ஐயோ! அண்ணா அண்ணா! உன்னையிழந்தால் இந்தநாடு சுடுகாடு தான்...

கட்டபொம்மன்: எங்கே தொண்டமான்?

பானர்மென்: இல்லை?...

கட்ட: இல்லை. இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தொண்டமான் அவர்கள் என்பால்கொண்ட அன்பை என்னென்று புகழ்வேன்! நண்பரே! உமக்கு என் நன்றி!

புதுக்கோட்டை மன்னன்வாழும் புதுமாளிகைஎன்று புகுந்தேன், ஆனால் அது அன்னியனுக்குக் காட்டிக் கொடுக்கும் கள்வர்குகை என்பதை அறியாதுபோனேன். என் தமிழ்மறவர்வாழும் தன்மானக்கோட்டை என வந்தேன்! ஆனால் இனத்தானைக்காட்டிக்கொடுக்கும் குணத்தான் வாழும் குள்ளநரிக் குகை என்பதை உணராதுபோனேன்!

தமிழனைத் தமிழனே காட்டிக்கொடுப்பான்-அதற்குப் புதுக்கோட்டை தக்க எடுத்துக்காட்டு!

புதுக்கோட்டை மன்னரே! ஆட்சியை விரும்பி மறக்குல மாட்சியை மறந்தீர்! உமது ஆட்சிஅழிக்கப்படும் நாள் எது! அந்தநாள் தமிழன் தன்மானம் பெற்ற திருநாள். வருகின்றேன்.

பானர்மென்: பாளையங்கோட்டைச்சிறைக்கு ஊமைத்துரைபாதுகாப்போடு செல்லட்டும்.

கட்ட: தம்பி! "தம்பியுடையான் பகைக்கஞ்சான்" என்றிருந்தேன். நீயும் பிரிக்கப்பட்டுவிட்டாய்! தயங்காதே சென்றுவா! பிரிந்தவர் கூடினால் பேசுவோம். இன்றேல்...

ஊமைத்: அண்ணா!

கட்ட: தமிழனாகவாழ்! தன்மானத்தோடுவாழ்! திருவிடத்தான் தீரன் என்பதை பகைவர் உணர வாழ்ந்துகாட்டு-வருகின்றேன்தம்பி! வருகின்றேன்.

ஊமைத்: தம்பி உன் வாக்கைத்தட்டமாட்டான் அண்ணா! நாம் வாழ்ந்த அந்த வாழ்வு எந்தநாள் வரும்!...

(பாட்டு: பாரதிதாசன் அந்தவாழ்வுதான்)

(தொடரும்)

இதோ தலைசிறந்த படம்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்

மதராஸ் பிக்சர்ஸ்:

சேந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்:

மேனகா

பத்மினி பிக்சர்ஸ்:

முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல் நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம், அம்மையப்பன்

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

சிவஞானமும் தமிழன் தாலியும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகவே, நன்று, முறையே கற்றுத் தேர்ந்து ஆராய்ந்த, வெங்கடசாமி நாட்டார், மதுரை முதலியார், ராசமாணிக்கனார் முதலியோர் கருத்துப்படி, 'சிலப்பதிகாரத்திலும் சங்க இலக்கியங்களிலும் தாலி குறிப்பிடப் படவே இல்லை' என்னும் சரியான ஆராய்ச்சி முடிவுக்கு நாம் வரலாம்.

தோழர் சிவஞானம், சிலம்புச் செல்வன் என்றெல்லாம் புகழ் வாங்கிக் கொண்டவர்; அதிலே தேர்ந்த அறிவாளி என்று தம்மைத்தாமே பாராட்டிக் கொள்பவர். நாமும் அவருக்குத் தெரிந்தது அது ஒன்றுதான் என்று கருதிக் கொண்டிருந்தோம். இப்போது அதுவும் பூஜ்யமா அவருக்கு என்ற ஆயாசம் பிறக்கிறது!

மேலும் தோழர் சிவஞானம் 'தாலி உண்டு' என்ற கூற்றுக்கு, புறநானூற்றுப் பாடல்களிலிருந்தும் ஆதாரம் தேடுகிறார். சான்றாக, ஒரு புறநானூற்றுப் பாடலிலிருந்து இந்த வரியைக் கூறுகிறார்:

"ஈகையரிய இழையணிமாதர்"

—அதாவது, "கொடுத்தற்கரிய தாலி (மங்கல அணி!)யை அணிந்த பெண்கள்" என்று உரையாசிரியர் கூற்றையும் சேர்த்துக் காட்டுகிறார். தாலி, கொடுத்தற்கு அரியது என்பது 'ஆரிய வழக்கு' ப்படி ஏற்பட்ட புனித எண்ணம். இதை, வாதத்துக்காக சரி என்று வைத்துக் கொண்டாலும், வெறும் 'ஈகையரிய' என்றாலே, கொடுத்தற்கரியது என்னும் பொருள் வந்துவிடும். 'மனிதன்' என்று சொன்னாலே, சாப்பிடாமல் வாழமுடியாதவன்; சாகாமல் இருக்க முடியாதவன் என்கிற பொருள்கள்-மனிதனுக்கு இயற்கையாக உள்ள நிலைகள்-தோன்றி விடும்! "சாப்பிடாமல் வாழுதற்கரிய மனிதன்; சாகாமல் இருத்தற்கரிய மனிதன்" என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதிலும் இளங்கோ வடிகள் போன்ற ஒரு சிறந்த புலவர் இந்தக் குற்றத்திற்கு ஆட்பட மாட்டார். ஆகவே, இழையணி என்பதற்கு ஆபரணங்கள் என்ற பொதுப் பொருளைத்தான் கொள்ள முடியும். 'தாலி' என்கிற 'ஸ்பெஷல்' பொருள் கொள்ள முடியாது! ஈகையரிய என்றால், 'கொடுத்தற்கரிய விலையுயர்ந்த' என்னும் பொருள் சுலபமாக வந்து நிற்கிறது. ஆகவே, பொதுவாக, விலையுயர்ந்த நகைகளை (தாலி அல்ல!) அணிந்த பெண்கள் என்று கொள்வதே அறிவுடைமை!

இதற்கு எடுத்துக்காட்டாக, புறநானூற்றிலேயே வேறு பாடலைக் காணலாம்! முள்ளை முள்ளால் தானே எடுக்கமுடியும்!

சோழன் கரிகாற் பெருவளத்தான் உயிர் நீத்தகாலை, அவன் பிரிவாற்றாது வருந்திய **கருங்குள வாதனார்** என்னும் புலவர் அவனைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று, புறநானூற்றில் 224-வது பாடலாக- நிற்கிறது. அதில், கரிகாற் பெருவளத்தான் இறந்ததும் அவனது 'உரிமை மகளிர்' நின்ற கோலத்தைப் புலவர் கூறுகிறார்:

"..............................
**பூவாட் கோவலர் பூவுடனுதிரக்
கொய்து கட்டழித்த
வேங்கையின்
மெல்லியன் மகளிரும்
இழைகளைந்தனரே!"**

—அதாவது, "ஆடு மாடுகளுக்கு இரைபோடுவான் வேண்டி, மேய்ப்போர், வேங்கை மரத்தின் இலைகளைக் கொய்து விடுகிறார்கள். அந்த மரம் மொட்டையாக நிற்கின்றது. அதுபோன்று மங்கையரும் எல்லா அணிகளையும் களைந்துவிட்டு நிற்கின்றனர்......" - இதுதான் பொருள். இதில் "இழை களைந்தனர்" என்பதற்கு ஔவை துரைசாமி பிள்ளை சொல்லும் பொருள், "அருங்கல அணி முதலாய அணிகலை ஒழித்தனர்" என்பதாகும். இதில் 'அருங்கலம்' என்பதற்கு, ஆபரணம், அழகு செய்யும் பொருள்-என்ற இரண்டு பொருள்கள் உண்டு. அதைத்தவிர 'தாலி' என்கிற பொருள் கிடையவே கிடையாது.

ஆகவே அழகு செய்யும் ஆபரணங்களோடு நகைகளோடு, மற்ற அணிகளையும்-அதாவது அழகுகளையும் (தொய்யில் எழுதல் போன்ற அழகுகள் - அலங்காரங்கள்) துறந்தனர் என்பதே பொருள். இதிலும் மங்கல அணி — தாலி — வரவே இல்லை! மரத்திலிருந்து சகல இலைகளையும் பறித்துப் போட்ட மாதிரி சகல நகைகளையும் பறித்துப் போட்டு, மொட்டை மரம் மாதிரி—எவ்விதச் செயற்கை அழகும் அணியும், அலங்காரமும் இன்றியிருந்தார்கள் என்பதே பொருள். இதிலும், **இழை** வந்திருக்கிறது, பொதுப்பொருளில்!— தாலி என்கிற ஸ்பெஷல்' பொருளில் அல்ல! ஆகவே, 'ஈகையரிய இழையணி' என்பதற்கு விலையுயர்ந்த-கொடுக்க முடியாத - நகைகள் என்ற பொதுப் பொருள் கொள்ளலாமே அன்றி தாலி என்று தனிப் பொருள் கொள்வது இமய மலையவ்வளவு மடமையாகும்!

224 வது பாட்டில், 'இழை **களைந்தனர்**' என்று வருகிறதே தவிர '**கழற்றினர்**' என்று வரவில்லை. தாலி அந்நாளில் இருந்திருந்தால், கணவனை இழந்த பெண்கள்பற்றிக் கூறும்போது அதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மேலும் வெறும் நகை பற்றி மட்டுமே கருங்குள வாதனார் கூறியிருந்தால், துறந்தனர் என்றோ, கழற்றினர் என்றோ கூறியிருக்கலாம். இலக்கணம் தப்பாமலேயே இவ்வார்த்தைகளில் ஒன்றைப் போட்டிருக்க முடியும். 'களைந்தனர்' என்று வருதலால், எல்லா அலங்காரங்களையும் அணிகளையும் களைந்தனர் என்பதே பொருள். ஆகவே புறப்பாட்டின் 400 பாடல்களிலும் ஒரு இடத்தில்கூட தாலி (மங்கல அணி!) குறிப்பிடப்படவில்லை.

வேண்டுமானால், "நான்கு கால் இருப்பதால் ஆடு; ஒரு வாலிருப்பதால் மாடு" என்கிற மாதிரி, வாதத்துக்காக வலிந்து பொருள் கொள்ளலாம். அது, ஆராய்ச்சியாளர்களுக்கு இருக்க வேண்டிய அறிவுடைமைக்கு எடுத்துக்காட்டாக முடியாது.

இவற்றை நோக்குமிடத்து சில உண்மைகள் புலனாகும். சிவஞானம் எடுத்துச் சொன்ன சங்க காலப் பாடல்களில் எங்கும் மங்கல அணி, இழையணி, என்று அணி அணியாக வருகிறதே அன்றி, தாலி என்கிற பதத்தைக் காணோம். அப்படியானால் தாலி என்கிற பதமே சங்க காலத்தில் இல்லையா? இருந்தது! அப்படியானால் அதை ஏன் ஒரு இலக்கிய கர்த்தனும் தொடவே இல்லை? எல்லோரும், 'தாலி'யை 'அணி' என்றே அழைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஒரு இடத்தில்- ஒரு கவிஞனாவது 'தாலி' என்கிற பதத்தை, உபயோகித்திருக்க வேண்டாமா? 'மங்கல அணி' தாலிதான் என்றால், ஒருவன் கூட அதை அப்பெயரிட்டே அழைக்காதது ஏன்? உண்மை இதுதான்: மங்கல அணிக்கு தாலி என்ற பொருளே அந்நாளில் கிடையாது!

சங்ககாலத்தில் 'தாலி' என்று வரும் வார்த்தை, மணமகன் மணமகளுக்குச் சூடிய 'மாங்கல்ய சூத்திர' மாகவரவில்லை. உதாரணமாக 'புறநானூற்றில் காணப்படும் 374 வது பாடலில், '**உறையூர் ஏணிச்சேரி முட மோசியார்**' என்ற புலவர், ஆய் அண்டிரன் என்ற வேளைப்பற்றிப் பாடியதாக உள்ள பூவை நிலைப்பாட்டில், ஒன்பதாவது வரியில்.

"புலிப் பற்றாலிப் புன்றலைச் சிறு அர்..."

என்று வருகிறது. அதாவது, சிறுவர்களுக்கு புலிப் பல்லாற் கோர்க்கப்பட்ட தாலி அணிதலைக் குறிக்கிறது- அது தான் தாலி என்று அழைக்கப்படுகிறது. (இதில் ஐம்படைத் தாலி, முப்படைத் தாலி எனப் பலவகை உண்டு.) இந்தப் பாடலில், சிவஞானம் கருதுகிற 'தாலி' யின் பொருள் சுக்கு நூறாக உடைபட்டுப் போகிறது.

புலிப்பல் கொண்டுவந்து திருமணம் செய்து கொள்வது கூட இலக்கிய வழக்காக இல்லை. வெறும் சமீபகால வாய் வழக்காகவே தான் இருக்கிறது. ஆகவே தாலி அணிதல் — மணமகன் மணமகளுக்குப் புனிதச் சின்னமாக அணிதல்—தமிழ்ப் பண்பாட்டில் அறவே இல்லை எனத் துணிந்து கூறலாம். திருமண மான பிறகு, வேட்டைக்குப் போகும் கணவன், புலியைக் கொன்று அதை மாலையாக்கி தன் பெருமையை மனைவிக்குக் காட்டி மனைவியின் கழுத்தில் 'ஜம்' மென்று வேடிக்கை யாகப் போட்டிருக்கிறான். அதாவது திருமணமெல்லாம் முடிந்து, எல்லாம் ஆன பிறகு!

ஆகவே, அறுதியிட்டு உறுதியாக தமிழ்ப் பண்பாட்டில்—சங்க இலக்கியத்தில்— 'திருமணத்தில் தாலி அணிதல்' இல்லவே இல்லை என்று கூறலாம்.

மற்றுமொரு கருத்தைக் கூறுகிறார் சிவஞானம். இதில் தான் மடமையின் சிகரத்துக்கு ஏறிவிடுகிறார்! ஆண்டாள் பாடல்களில்-நாச்சியார் திருமொழியில்—திருமண சம்பந்தமாக வருகிற "**வாரணம் ஆயிரம்**' என்ற பாடலில், "**கோடி உடுத்தி மணமாலை சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்**" என்று வருகிறது. இதில் மணமாலை என்பது தாலிதான் என்று உடும்புப் பிடியாகப் பிடிக்கிறார்! மணமாலை என்பதற்குநேரடியாக 'தாலி' என்ற பொருள் எந்த அகராதியிலும் இல்லை! இப்படி யாரும் கூறிவிடுவார்களோ என்ற பயத்தில், "மண மாலை என்ற சொல்லில் தாலியைக் குறிப்பிடுவது இன்றளவும் **வழக்கமாகவும் இருந்திருக்கிறது**" என்கிறார். ஆமாம்; வழக்கமாக இருந்திருக்கிறது என்றுதான் கூறுகிறார். அந்தப் பொருள் வெறும் 'வாய் வழக்கு' என்பதைத்தான் குறிப்பிடுகிறார். வாய் வழக்கை வைத்து இலக்கியச் சொற்களை எடை போடுவது என்ன ஆராய்ச்சியோ நமக்குப் புரியவில்லை! பொருள் காண முடியாத பதங்களுக்கு, 'வழக்கு'த் தேடுவதுதான் அறிவுடையோர் வழக்கம்! மணமாலை என்ற பதத்துக்கு மணம் தரும் பூமாலை என்கிற பொருள் அழகாக—தெளிவாக இருக்கிறது! அப்படிப் பொருள் உள்ள சொல்லை 'வாய் வழக்கை' வைத்துக் கொண்டு ஆராய்வது, மடமையை வெளிப் படுத்திக் கொள்வதாகும்! இதிலிருந்து ஆண்டாளின் 'மணமாலைத் தாலி' யும் சிவஞானத்தைக் கைவிடுகிற பரிதாபத்தைப் பார்க்கிறோம். மணமாலை என்ற சொல்லுக்கு மலர்மாலை என்ற பொருளே, சரியாக அழகாக நிற்பதைக் காண்கிறோம். அங்கே, தாலி இல்லவே இல்லை என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

இப்படி எல்லா இலக்கியங்களிலும் நுனிப்புல் மேய்ந்து, தனக்குப் புரியாததைப் போட்டுக் குழப்புகிறார், சிவஞானம். இதன் மூலம், டாக்டர் ராசமாணிக்கனாரோடு, தி. மு. கழகத்தின் கருத்தையும் ஆராய்ச்சியையும், வெற்றி கரமாக நொறுக்கி விட்டதாகப் பகல்கனவு கண்டு தன் கதையை முடிக்கிறார்.

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்

படங்களுக்கும், போட்டோக்களுக்கும், மற்றும் பலவித படங்களுக்கும் உபயோகமாகும் படச் சட்டங்கள் எங்களிடம் தயாராகின்றன.

மொத்த தேவைக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

தமிழ்நாடு பிரேம் ஒர்க்ஸ்

(படச்சட்ட தயாரிப்பாளர்)

சைதாப்பேட்டை :: வேலூர் (N. A.)

ஏற்றுக்கொள்ளலாமா ?

கூடாது !

பரிசுபெற்ற முடிவு :

கடந்த 2-10-54 தேதி 'தென்ற'லில் "ஏற்றுக்கொள்வதா ?" என்னுந் தலைப்பில் ஒரு கதை வெளியிட்டு, முடிவு கேட்டிருந்தோம். அதையொட்டி, ஏற்கலாம் என்றும் கூடாது என்றும் பல பதில்கள் வந்தன. கதையின் சாரமும், முறையும் ஏற்க முடியாத அளவிலேயே வரையப்பெற்றிருந்தது. அதைக் கண்டு பிடித்து சரியாக விளக்கி எழுதிய ஒரு கடிதம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இதற்கு ரூ. 10 பரிசில் வழங்கப்பெறும். மற்றும், பலவிதமாகக் காரணங்கள் எழுதிய நண்பர்களின் கடிதங்களை வைத்து அவர்கள் பெயரோடு ஒரு ஆராய்ச்சிக்கட்டுரை எழுதப்படும். "கூடாது" என்று கூறிய மற்றவர்கள் இந்தக் காரணத்தைக் கூறவில்லை. ஆகையால் இந்தக் கடிதத்திற்கு மட்டும் பரிசில் வழங்கப்பெறுகிறது.

[ஆ—ர்]

ரஞ்சனி தன் உடல் களங்கப்பட்டு கெட்ட பின்பு புலவரிடம் சென்று தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்கிருள். ஆனல் என்னுடைய அபிப்பிராயப்படி புலவர் அவளை ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏன்? ரஞ்சனி முன்பு ஒரு முறைபின் வருமாறு கூறியிருக்கிருள் "நான் கலையை மணந்துவிட்டேன். இனி மேல் எனக்கு மணம் கிடையாது". இப்படி முதலில் ரஞ்சனி ஒருவரையும் திருமணம் செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனல் அமைச்சர் மகனல் தான் கற்பழிக்கப்பட்ட பிறகு தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு புலவரிடம் கேட்கிருள். எதற்காக! முதலில் திருமணமே வேண்டாம் என்றவள், தான்கற்பழிக்கப்பட்டாய் விட்டது; இனிமேல் தனக்கு வாழ்வு இல்லை என்று தெரிந்தவுடன் புலவரை அவள் அணுகுகிருள். அவ்வனுக்கு உண்மையான காதல் புலவர்மேல் இல்லை என்பது இதில் இருந்து தெரிகிறது. அவன் புலவரைக்காதலித்துக் கொண்டிருக்கும் பொழுது அவளை ஏற்றுக்கொள்ள தடையில்லை. ஏன்? ஏனென்ருல் அவள் உள்ளத்தால் புலவரைக்காதலித்தாள். ஆனல் இங்கே அவளை புலவர் தான் காதலித்தாரே தவிற அவள் அவரைக் காதலிக்கவில்லை. ஆனல் தான் கற்பழிக்கப் பட்டபின்பு இனிமேல் தனக்கு வாழ வழியில்லை என்று தெரிந்து கொண்டவுடன் அவள் புலவரை அணுகி, திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்கிருள். ஆகவே புலவர் அவளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதே என் அபிப்பிராயம்.

கு. ஜோசப் பேஸ்கி
செய்ன்ட் எக்ஸ்சேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை

(ஏற்றுகொள்ளக் கூடாது என்ற கருத்தினையே ஆதரித்து எழுதிய தோழர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும் (ஆ—ர்)



டாக்டர்: (கடைசி சோதனையையும் முடித்துவிட்டு, நோயாளியிடம்) உமது உடம்பு முழுவதையும், பரிசோதித்ததில், உடம்பில் கொழுப்பு மிகவும் அதிகமாக இருப்பதாகக் காணப்படுகிறது. மேலும் மூளை வரண்டுபோய் இன்னும் சிறிது நாளில் பைத்தியம் பிடிக்கக் கூடுமென்றும் தோன்றுகிறது. நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர் ?

நோயாளி: 'தினத்தந்தி' என்னும் பத்திரிகை நடத்துகிறேன்.

மாமல்லபுரம்

காவியமும் ஓவியமும்
 களித்தாடுதே—கலைக்
கோவிலிலே எழில் கொஞ்சி
 மகிழ்ந்தே தினம் (காவியமும்)

ஆவியை அள்ளுதந்தோ
 கற்பனையின் சோலை
அழகில் விளைந்த தெல்லாம்
 சிற்பிகை வேலை ! (காவியமும்)

உலகத்தழகை எல்லாம்
 உள்ளத்தில் கூட்டி
உயிராம் கலைக் கனவை
 உரு வெனத் தீட்டி
இலக்கியக் காதலுக்கு
 இன்பத்தை யூட்டி
இறவாக் கவிதை சொலும்
 அற்புதம் காட்டி (காவியமும்)

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
 பெண்மைதரும் காட்சி
உயிரும் உடலு மெல்லாம்
 உவந்திடும் ஆட்சி
துள்ளுகிற கவிஞனுள்ளச்
 சிந்தனையின் மாட்சி
தோற்றிய சுடர்க் கோவில்
 அதிசய மீட்சி ! (காவியமும்)

கற்பனையின் கவினனைத்தும்
 கற் சுவரில் பாடும்,
கதைகள் பலவும் சொல்லி
 காதலால் ஆடும்
அற்புதத்தின் ஜால வித்தை
 நெஞ்சத்தில் கூடும்
அருமைக் கலை களெல்லாம்
 அலைந் தலைந் தேர்டும் (காவியமும்)

இன்பத்தின் உருவமெல்லாம்
 இணைந்திணைந் தாடி
இனிமைப் பரிதி ஒளி
 வானவில் கோடி
தன்போக்கில் வண்ணங் காட்டும்
 சிற்பத்தில் ஓடி
தலைமைக் கலைத்தீவில்
 கலந்திடும் கூடி ! !

த. கோவிந்தன்.

திராவிட இளைஞர் முன்னேற்றக் கழக
திறப்பு விழா
31—10—54 மாலை 5-30 மணிக்கு
புதுப்பேட்டை தோட்டத்தெரு திடலில்
(இராயப்பேட்டை-சென்னை)

தலைவர் :
K. R. சம்மந்தம்

சொற்பொழிவாளர்கள் :
கவிஞர் கண்ணதாசன்
N. V. நடராசன்
முகவை R. S. பாண்டியன்
முதலியோர் பேசுவார்கள்

பெரும்பயணம்

கண்ணதாசன்

நடராசன் தனைப்பற்றிச் சட்டமன்றில்
நம் கத்தேரங்கையநாயு டென்பர் ;
விட நெஞ்சன் ஆச்சாரியாரைப் பார்த்து
வினவுகின்றார் ; "நடராசன் மறைவு இந்தத்
திடநாட்டிற் கொதிப்பூட்டி விட்டதையா !
செப்பிடுவீர் ! எவ்வாறு சிறையில் மாண்டான் ?"
சடைவாயில் புன்னகையை ஒழுகவிட்டுக்
களிப்போடு ஆச்சாரியார் எழுந்து,

★ ★ ★

"படியாத பறையனவன் ; அதனால் மாண்டான்,
படித்திருந்தால் மாண்டிருக்க மாட்டான் !" என்று
குடிகாரன் நிலையோடு பதில் சொல்கின்றார் !
கொதிக்கின்றார் தமிழ்ச் சாதி உறுப்பினர்கள் !
இடிபோலச் சிரிக்கின்றார் பார்ப்பார் ! உள்ளில்
எண்ணி எண்ணி நகைக் கின்றார் தனைமறந்து
மடநாடே ! பொறுக்காமல் சொல்லு கின்றேன் ;
வாழ்கின்றார் ! அவர் இன்னும் வாழுகின்றார் !

★ ★ ★

சாவிங்கே ! சிரிப்பங்கே ! தடித்ததோலர்
சதை தன்னைத் துண்டாக அறுத்துப் போட்டு
"சாவுக்குச் சாவெ"ன்று சாற் றுராகத்
தமிழ்சாதிப் பெரியோர்கள் அமைதி கொண்டார்!
நாவெங்கே எனக் கேட்கும் இளைஞர் கைக்குக்
கட்டுப்பாடென் கின்ற வேலி யிட்டார் !
நோவில்லா சுகவாழ்வு வாழும் பார்ப்பார்
"நுடமாகும் தமி" ழென்று புன்னகைத்தார் !

★ ★ ★

1939 மே 22

"எதிர்பாரா விதமாகச் சிறையினின்று
ஈ. வே. ரா. விடுவிக்கப் பட்டார் !" என்னும்
பதமான நற்சேதி காதில் வீழப்
பழக் கொத்தாய்த் தமிழ்க் கூட்டம் ஓடிச் சென்று
"பெரியாரே ! எம் தந்தாய் ! வாழ்க !" என்று
பெருங் காற்றின் ஒலியோடு முழங்கும் ! அங்கே
சிரியாத முகம் இல்லை ! தமிழர் நாடு
சிற் றோடைக் கரைமுல்லைக் காடாய்த் தோன்றும் !

★ ★ ★

அறு திங்கள் புறம் போக ஓராண்டின்னும்
அனுபவிக்க வேண்டுமெனும் நிலையிருந்தும்
தெருவெங்கும் தமிழ்பாடும் கூட்டம் கண்டு
திகைப் புற்றார் ; பெரியாரை விடுவித்திட்டார் !
"குறு உள்ளக் கொலைகரான், கருங் கண்ணாடி
கூர்மூக்கில் ஆடிவரச் சட்ட மன்றில்
சிறு வார்த்தை சொன்ன தெலாம் எங்கே ! நாடு
சீறுமெனில் நரிக்கூட்டம் போவதெங்கே !"

★ ★ ★

எனக் கேட்டார் தமிழ் மக்கள் ! கொங்குநாட்டு
எழில் வேந்தன் முகம் மட்டும் சோகம் கவ்வும் !
"மனக்கேடு என்னேயோ ?" தமிழர் உள்ளம்
வாடிற்றுப் பெரியாரின் வாட்டம் கண்டு !
"இனக்கேடு கண்டற்றே கிளர்ந் தெழுந்த
ஈரோட்டுப் பெரியாரே ! நேர்ந்த தென்ன !"
எனக் கேட்கும் பல பேர்க்கும் பொதுக் கூட்டத்தில்
ஈரோட்டில் ஈ. வே. ரா. பதில் சொல்கின்றார் :

(ஈரோட்டு வரவேற்பில் பெரியார் பேச்சு)

"நான் சிறையிலிருந்து உடல் நலமின்றி வெளி வந்தேன் என்றாலும் இன்று உடல் நலத்துடன் இருப்பதாகவே உணர்கிறேன். ஏனெனில் இன்று இவ்வளவு பெரிய கூட்டத்தையும் எனது அருமைத் தோழர்களையும் பார்க்கும்போது எனக்கு உண்டாகும் ஊக்கத்திற்கும் அளவே இல்லை. நான் உடல் நலமின்றி மெலிந்து மிகப் பலவீனமாக இருந்து வெளியில் வந்திருந்தாலும் உங்கள் உற்சாகத்தினால் அந்த பலவீனமெல்லாம் இப்போது தெரியவில்லை. நான் விடுதலை அடைந்ததைக்குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்கள். ஆனால் நான் மகிழ்ச்சியடைவதற்கில்லை. ஏன், நான் எதைக் கொண்டு மகிழ்ச்சியடைவது ? நான் எதற்காக சிறை புகுந்தேனோ அது வெற்றியடைந்து விட்டதா ? இல்லையே ! அது வெற்றியடையாது நான் விடுதலை யடைந்து பயன் என்ன ? மீண்டும் சிறை செல்லவே விடுதலை இப்போது வந்ததோ என்றும் எண்ணுகிறேன். நான் இங்கு வந்து எதைப்பார்க்கிறேன் ? என்னுடன் சிறை சென்ற தமிழர்களைப் பார்க்க முடியவில்லையே. நமது நாட்டிற்கு கேடு விளைக்கும் கட்டாய இந்தி ஒழியும் வரை நாம் பாடுபட வேண்டும். நான் சிறையிலேயே இறந்திருக்க வேண்டும் என்று கருதுகிறேன், அப்படி நான் இறந்திருப்பேனேயானால் நமது இயக்கம் மிகவும் ஓங்கி உச்ச நிலை அடைய வழி ஏற்பட்டிருக்கும்."

தொடரும்.

கல்லக்குடி அடுத்தகட்டம்

★ கல்லக்குடி வழங்கப்பட்டுவிட்டது ; அறப்போர் வென்றது ; என் வாழ்த்தும் வணக்கமும் தொடர்பு கொண்ட அனைவருக்கும்.

★ கல்லக்குடி வழங்கிய மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சருக்கும், மாநிலத்தின் மனப்போக்கை எடுத்துக்காட்டி, இந்த நீதி கிடைக்கச் செய்த சென்னை சர்க்காருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

★ கல்லக்குடி வழங்கப்பட்டிருப்பது, காமராசர் சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு கொண்டது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மகிழ்கிறேன்.

★ கல்லக்குடி கிடைக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும், துணை நின்ற பல்லோருக்கும் நன்றி கூறிக் கொள்ளுகிறேன்.

★ கல்லக்குடி கோரி நடத்தப்பட்ட கிளர்ச்சியின்போது உயிரிழந்த வீரத் தியாகிகளை எண்ணி உருகாமலிருக்க யாரால் இயலும் ? அவர்களின் வீரத் தியாகம் வீண் போகவில்லை என்பது கண்டு, நமது மனமெலாம் எழுச்சி மயமாகிறது.

★ கல்லக்குடி காண அரும்பாடுபட்டு உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு 'நினைவுக் காணிக்கை' செலுத்த வேண்டியது, தி. மு. கழகத்தின் கடமை ; ஏன், அறம் அறிந்த அனைவருக்கும் அக்கடமை உண்டு.

★ கல்லக்குடி வெற்றி கண்ட தோழர்கள், இனி, அந்த 'காணிக்கை' உருவாகச் செய்யும் பணியினை அடுத்த கட்டமாகக் கொள்ள வேண்டுகிறேன். இது குறித்து தோழர்களின் சீரிய யோசனைகளை அறிய அவாவுள்ளவனாக இருக்கிறேன்.

அன்பன்,
அண்ணாதுரை.

பீ. ரங்கசேகரன், மதுரை.

'மணிமேகலை' என்பவள் மாதவியின் மகளா, கண்ணகியின் மகளா? மாதவியின் மகள் எனத் தான் இலக்கியம் கூறுகிறது. ஆனல் இங்கு பேசிய தமிழாசிரியர் ஒருவர், "மணிமேகலை, கண்ணகியின் மகள்" எனப்பேசினர். கண்ணகிக்கு மகள் உண்டா? என்றல், அது மணிமேகலைதாஞ? விளக்கம் தேவை.

கண்ணகிக்குக் குழந்தை இருந்ததாக எந்த வரலாறும்-இலக்கியமும்-கூறவில்லை. பேசிய தமிழாசிரியர் அப்படிக் குறிப்பிட்டிருக்க நியாயமே இல்லை. ஒரு வேளை, கீழ்க்கண்ட பாடலை வைத்து, வேறு மாதிரி கூறியிருக்கலாம் என ஐயுறுகிறேன். சீத்தலைச் சாத்தனர் இவ்விதம் ஒரு காட்சியைச் சித்தரிக்கிறர்:

ஆண்டுதோறும், காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா நடப்பது வழக்கம். கோவலன்-கண்ணகி சோக முடிவிற்குப் பின், மாதவி மனம் பொருதவளாய்த் தன் மகள் மணிமேகலையுடன் துறவு பூண்டு வாழ்ந்து வந்தாள். இந்நிலையில் ஒரு ஆண்டு இந்திர விழா வந்தது. எந்த ஆண்டிலும் இந்திர விழாவிற் கலந்து கொண்டு நடனமாடி மக்களை மகிழ்வித்த மாதவியும் மணிமேகலையும் அந்த ஆண்டு விழாவில் கலந்து கொள்ளாமல் இருந்தனர். பொதுமக்கள் அந்த ஆண்டு ஏமாற்றமடைந்து நின்றனர். அந்த வேளையில் மாதவியின் தாய் சித்திராபதி, இதைப்பொறுக்க முடியாமல், மாதவியின் தோழியாகிய வசந்தமாலையை அழைத்து, மாதவியிடம் தூது போய், அழைத்து வரப் பணிக்க, வசந்தமாலையும் அவ்விதமே போய்ச்சேருகிருள். போய், "அழகு மிக்க அணங்கே! உன் துறவு எல்லோருக்கும் கவலையைத் தருகிறது. நடனம் வல்ல நகைமுக மாது நீயும் மணிமேகலையும் ஆடற்றெழில் நீங்கித் துறவு பூண்டது தவறு. வாருங்கள்", என அழைக்கிருள். அதற்கு மாதவி, "இனி நான் ஆடற்றெழிலில் ஈடுபட மாட்டேன். ஏன்; மணிமேகலையும் வரமாட்டாள். அவள் யார் தெரியுமா? கணவன் கடுந்துயர் உற்ருன் எனக்கேட்ட உடனே உயிர் உடலை விட்டு ஓடாது, நாண் துறந்து நலம் துறந்து நிற்கும் என் மகளல்ல. கணவன் மாண்டதும், கொல்லனது உலைக்களத்துள்ள துருத்தியின் மூக்கைப்போல் பெருமூச்செறிந்து, கண்ணீர் சிந்தி, உடனே இறந்து விடும் பத்தினிப்பெண்டிரிலும், கைம் மையை மேற்கொண்டு வாழும் பத்தினிப்பெண்டிரினும் மேலான பத்தினியாகிய கண்ணகி ஆம்; கணவன் மாண்டதும், நீதி தவறிய பாண்டியனின் மதுரையை அழித்த கண்ணகியின் மகள் மணிமேகலை. அவள் துறவு கொள்ளளே அன்றி, தாசிகுலத்தொழிலுக்கு உடன் படாள்!" என்று கூறி வசந்தமாலையைத் திருப்பி அனுப்புகிருள். அப்போதுதான் 'குணத்தில் கண்ணகியின் மகள்' என்பதை நேரடியாகக் கண்ணகியின் மகள் என்றே கூறுகிருள்.

"காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரோடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை
இழந்து
நற்றேடி நங்காய் நாணுத் துறந்தேன்.
காதலர் இறப்பின் கனை யெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்(து) அகத்
தடங்கா(து)
இன்னுயிர் ஈவர்; ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி
புகுவர்;
நளியெரி புகாஅர் ஆயின்
அன்பரோ(டு)
உடனுறை வாழ்க்கைக்கு நோற்(று)
உடம்படுவர்;
பத்தினிப்பெண்டிர் பரப்புநீர்
ஞாலத்(து)
அத்திறத்தாளும் அல்லள் எம்
ஆயிழை.
கணவர்க் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மண்மலி கூந்தல் சிறு புறம்
புதைப்பக்
கண்ணீர் ஆடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழல் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரியூட்டிய
மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை
அருந்தவப்படுத்தல் அல்ல(து)
யாவதும்
திருந்தாச் செய்கைத்தீத் தொழிற்
படாஅள்."

—என சீத்தலைச் சாத்தனர், மாதவியின் வாய்மொழியிற் கூறுகிருர். இதை நீர் தவருகப் புரிந்து கொண்டிருக்கலாம். கண்ணகியை உயர்வுபடுத்தித் தன்னைத்தாழ்த்திக்கொண்ட மாதவியின் சிறந்த உள்ளம், தங்களுக்குள்ள ஒட்டுறவையும் கூற "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை" என்று நேரடியாகக் கூறுவதால், தவருகப் புரிந்து கொள்ள ஏது உண்டு.

தந்தி: "ராஜா". போன் 268

நகை வளர்ந்த கதை

★

குறிஞ்சி நிலப்பெண்கள் இலை குழைகளையே ஆபரணங்களாகப் பூண்டனர்: இது மக்கள் சீர்திருத்த முருத காலத்தில் இருந்த வழக்கம். அக்காலத்து மரம் - செடி - கொடிகளில் பறித்து அணிந்த அரசிலை குழை ஓலை-கொந்திள ஓலை-சீர்திருத்த காலத்து ஆபரணங்களாக மாறின. பழந்தமிழரது அணிகளில் பீலி- காலணி - சிலம்பு - தண்டை-கிங்கிணி-தோளணி- மாணிக்க வளை - முத்துவளை - பொன்வளை-நவரத்தினவளை-சங்குவளை-பவழவளை- முதலியன சில. இவைகளை அணிந்து அழகு பெறுவதில் பண்டைய மகளிர் தணியா வேட்கை கொண்டிருந்தனர்.

காலத்திற்கேற்ற - உத்திரவாதமுள்ள நகைகளுக்கு, பி. ஏ. ராஜு செட்டியார் கடை புகழ்பெற்றது.

வைரம், தங்கம், வெள்ளி நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் என்றும் கிடைக்கும் இடம்....

Anand...

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்.

சுவர்ணமாளிகை.. கோயமுத்தூர்.

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. and Printed by U. Ramaswamy at Bharathi Printers, 119, Broadway Madras-1.